321

ஸ்ரீ:

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

-:○ திரு எவ்வுள்கிடந்தான் ○:-

321
1-55

ஜய ஸூ
தை மீ

ஸம்புடம் 14.
ஸஞ்சிகை 1.

வருஷச்சந்தா ரூ 3.

தனிப்ரதி அணா 4.

JANUARY 1955.

Vol. 14. No. 1.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	2
2. பகவத்த்யாநஸோபாநம் [ஸ்ரீ. உப. மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	5
3. திருப்பாவைக்கதை [ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]	9
4. ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள் [ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, தலைமையாசிரியர், ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.]	13
5. கதையும் காரணமும் [ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	16
6. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	18

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri AhobilaMutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை

[விஜய - ஜய]

ஸம்புடம் - 13

ஸம்பாதகர்:-
ஸ்ரீ. உப. T. ராமஸ்வாமி ஐயங்கார், M. A., L. T.

—:ப்ரசுரிக்குமிடம்:—
30, பனகல் தெரு, திருவுள்ளூர்.

திருவுள்ளூர்
ஸ்ரீ மாலோல முத்ராலயத்தில்
அச்சிடப்பட்டது
1954

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

விஷயஸூசிகை

[அகராதி]

ஸம்புடம் - 13

விஷயம்	பக்கம்
அட்டைப்படவிளக்கம்	154, 185, 221, 278, 367
அடியேன் பெற்ற பாக்யம் [ஸ்ரீ. உப. அத்தி நரஸிம்ஹாசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]	400
அன்னதாத: ஸுகி பவ [ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	143
அன்னமயம் [ஸ்ரீ. உப. வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	15
அபீதிஸ்தவம் [ஸ்ரீ. உப. மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம்.]	43, 75, 111, 139, 171
அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் எம்பெருமான் [ஸ்ரீ. உப. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதுரை.]	267
அருளிச்செயல்கள் [ஸ்ரீ. உப. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதுரை.]	207
ஆசார்யமஹிமை [ஸ்ரீ. உப. சிலுக்கூர், வெங்கடராகவாசார்யஸ்வாமி, ஹைதராபாத்.]	364
ஆதிபகவன் [ஸ்ரீ. உப. பந்தல்குடி: பா. ரெ. திருமலை ஐயங்கார் ஸ்வாமி, அம்பத்தூர்.]	115, 155
ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம் [ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம், நரஸிம்ஹாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]	9
உபயவேதாந்த ஐககண்ட்யம் [ஸ்ரீ. உப, A. V. கோபாலாசார்யஸ்வாமி, திருச்சி.]	244, 271
'ஒரொன்றுதானே' [ஸ்ரீ. உப. திண்டுக்கல், ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி; சென்னை.]	279, 332, 393
கண்டதும் கேட்டதும் [ஸ்ரீ. உப. பாதூர், ராமபத்ராசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]	165
கலியன் கண்ட கடன்மல்லைக் கண்ணன் [ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]	18

விஷயம் பக்கம்

கார்த்திகைப் பூராடம் 357
[ஸ்ரீ. உப. பந்தல்குடி, ரெ. திருமலை ஐயங்கார் ஸ்வாமி, அம்பத்தூர்.]
கும்பமேளா 120
[ஸ்ரீ. உப. A. S. ஐயங்கார் ஸ்வாமி, பம்பாய்.]
குருகுல ஸல்லாபம் 269
[ஸ்ரீ. உப. பாதூர், ராமபத்ராசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]
கோதையும் கோவிந்தனும் 385
[ஸ்ரீ. உப. வேளியநெல்லூர், வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]
செய்திகள் 8, 50, 89, 119. 219, 226, 262, 337, 370, 397
சொன்மாலை 90
[ஸ்ரீ. உப. ஒரகடம், ஸுதர்சனாசார்யஸ்வாமி, அவளூர்.]
ஜிதகர்ணன் 25
[ஸ்ரீ. உப. பாதூர், ராமபத்ராசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]
தாம்பூலம் 194
[ஸ்ரீ. உப. புரிசை, கிருஷ்ணமாசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]
திருப்பாவைக்கதை 11, 39, 71, 103, 135, 167, 199, 231, 263, 349, 381
[ஸ்ரீ. உப. திருவரங்கம், திருமலை தாதாசார்யஸ்வாமி, திருப்பதி.]
திருமாலிருஞ்சோலை 253
[ஸ்ரீ. உப. D. கிருஷ்ணமாசார்யஸ்வாமி, மதுரை.]
திருவுள்ளூரில் மஹோத்ஸவங்கள் 56
[ஸ்ரீ. உப. A. T. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, திருவள்ளூர்.]
திவ்யப்ரபந்தங்களில் ஒரு பாடல் 366
[ஸ்ரீ. உப. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதுரை.]
தீயாரைக் காண்பதுவும் தீதே 239
[ஸ்ரீ. உப. ஒரகடம், ஸுதர்சனாசார்யஸ்வாமி, அவளூர்.]
தேசிகதயோதயம் 320
[ஸ்ரீ. உப. மதுராந்தகம், தி. ஈ. வீரராகவாசார்யஸ்வாமி, திருவையாறு.]
தேசிகன் மேன்மை 329
[ஸ்ரீ. உப. உத்தமூர், வீரராகவாசார்யஸ்வாமி, மாம்பலம்.]
தேசிகமணியின் அவதாரரஹஸ்யம் 291
[ஸ்ரீ. உப. பாதூர், ராகவாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]
தேசிகமஹோபகாரமும் நமது கடமையும் 310
[ஸ்ரீ. உப. மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]
நன்கொடைகள் 274

நமது கடமை 324

[ஸ்ரீ. உப. பாதூர், ராமபத்ராசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]

நற்போதுபோக்கு 107, 195, 360

[ஸ்ரீ. உப. ஓரகடம், ஸுதர்சனாசார்யஸ்வாமி, அவளூர்.]

[ஸ்ரீராமாநுஜதாஸன், மதுரை.]

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 21, 59, 85, 123, 146, 186, 216, 250, 283, 338, 344, 402

நீயும் அதுதான் 100

[ஸ்ரீ. உப. T. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதுராந்தகம்.]

நீ ஸர்வஜ்ஞனாகவேண்டா 281

[ஸ்ரீ. உப. வில்லிவலம், கிருஷ்ணமாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]

ப்ரார்த்தனாச்லோகங்கள் 222

[ஸ்ரீ. உப. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]

பகவதவதாரப்ரயோஜனம் 91

[ஸ்ரீ. உப. அத்தி, கிருஷ்ணமாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]

பஞ்சாங்கஸங்க்ரஹம் 94, 347

பத்ரிகைத்தொண்டு 79

[ஸ்ரீ. உப. வில்லிவலம், நாராயணாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]

புண்ணியனைப் பொன்மாதுடன் கண்ட பொய்கைப்பிரான் 241

[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]

புத்தகவிமர்சனம் 38, 209

புராணங்கொண்ட பூர்வாசார்யர்கள் 295

[ஸ்ரீ. உப. வில்லிவலம், நாராயணாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]

பேருளாளனின் பேருதவி 318

[ஸ்ரீ. உப. வேளியநல்லூர், வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]

பேருளாளபேராசிரியஸல்லாபம் 326

[ஸ்ரீ. உப. அத்தி, கிருஷ்ணமாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]

மங்களபத்ரிகை 70

மாத்ருபித்ருபக்தி 275

[ஸ்ரீ. உப. ஓரகடம், ஸுதர்சனாசார்யஸ்வாமி, அவளூர்.]

யதோக்தகாரி ஸ்தோத்ரம் 391

[ஸ்ரீ. உப. வேளியநல்லூர், ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]

யக்ஷப்ரச்னம் 203, 235

[ஸ்ரீ. உப. அத்தி, கிருஷ்ணமாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]

யாரே அறிபவர் அவன் செய்யும் மாயங்களே 227
[ஸ்ரீ. உப. வில்லிவலம், நாராயணாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]
ரஸோக்திகள் 23
[ஸ்ரீ. உப. புரிசை, கிருஷ்ணமாசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]
ராமாநுஜபதமும் பாரதந்த்ரியமும் 353
[ஸ்ரீ. உப. வேளியநெல்லூர், ஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமி, காஞ்சீபுரம்.]
'வடிவழகார்ந்த வண் தூப்புல்வள்ளல்' 316
[ஸ்ரீ. உப. ஓரகடம், ஸுதர்சனாசார்யஸ்வாமி, அவளூர்.]
வள்ளலே வாழ்த்தும் வரதாரியன் 300
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
வாழ்த்துப்பதிகம் 362
வாழவழியருளும் வாட்சலியன் 183
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
விசாகோத்ஸவம் 368
[ஸ்ரீ. உப. புரிசை, கிருஷ்ணமாசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]
விஜ்ஞாபகபத்ரிகை 157
வேதாந்தாசாரியர் 354
[ஸ்ரீ. உப. கொடியாலம், துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி.]
ஸ்ரீ அழகியசிங்கரின் அருள்மொழிகள் 377
[ஸ்ரீ. உப. பாதூர், ராமபத்ராசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]
ஸ்ரீ அழகியசிங்கரின் திருவனந்தபுரவிஜயயாத்திரை 163
[ஸ்ரீ. உப. ஸ்ரீகார்யம், தையார், ஜோ, ரங்காசார்யஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம்.]
ஸ்ரீ அழகியசிங்கரின் மஹிமை 260
[ஸ்ரீ. உப. ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், புத்தங்கோட்டகம், ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]
ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள் 47, 82, 177, 213, 247
[ஸ்ரீ. உப. தோட்டாலம், வேணுகோபாலாசார்யஸ்வாமி, பாதூர்.]
ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் 211, 284
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, திருச்சி.]
ஸ்வதர்மம் 387
[ஸ்ரீ. உப. ஓரகடம், ஸுதர்சனாசார்யஸ்வாமி, அவளூர்.]
ஸ்வாகதபத்ரிகைகள் 20, 54
ஸ்வாமி உகந்த ஸேவை 334
[ஸ்ரீ. உப. புரிசை, கிருஷ்ணமாசார்யஸ்வாமி, திருவுள்ளூர்.]

ஸத்யஸந்தன் 179

[ஸ்ரீ. உப. வில்லிவலம், நாராயணாசார்யஸ்வாமி, மதுராந்தகம்.]

ஸம்பாதகரின் குறிப்புக்கள் 2, 32, 64, 96, 128, 160, 192, 224, 256, 288, 342, 374

ஸரஸஸல்லாபம் 389

[ஸ்ரீ. உப. ஸந்தானகோபாலாசார்யஸ்வாமி, ஹைதராபாத்.]

ஹம்ஸஸந்தேசம் 214, 313

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, திருச்சி.]

க்ஷீராப்தி க்ருஷ்ணன் 303

[ஸ்ரீ. உப. திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, திருப்பதி.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } ஜய ௵ தை ௴ { ஸஞ்சிகை 1

‘𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌮𑍍
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्चहस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

'காரணமாய்க் காரியமாய்க் கண்டிடுமிவ்வுலகத்தில் பூரணமாயுரைக்கின்ற நாரணனின் மெய்யுருவை உணர்ந்து, அடிபணிந்து நாம் உய்யும் வழியை நமக்கு எடுத்து உரைப்பனவாம் 'அந்தமிலரவாரணங்கள்'. 'வேதங்கள் மௌளி விளங்க வியாசன் விரித்த நன்னூல்' என்று ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸாதித்ததுபோல் வேதங்களின் உட்கருத்தை இதிஹாஸ புராணங்களினால் நாம் நன்குணர்ந்து, ஆழ்ந்தநுபவிக்கிறோம். வேதங்களின் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து செந்தமிழால் அருளினார்கள். இவைகளையும் பாடியும் கேட்டும் நாம் நற்கதியடைகிறோம். இப்படி நமது அறிவினால் எண்ணமுடியாத செய்யக்கூடாத கார்யங்களையும் செய்யவல்லவன் ஸர்வேச்வரன் ஒருவனே என்பதை நாம் அறிவதுதான் நமது 'முன்செய்த தவப்பயன்'. அப்படிப்பட்ட தவம் செய்யாதவரும் உளர். அவர்களையும் நற்கதிக்குக் கொண்டுவர வேண்டியதும் நமது கொள்கையும் கடமையுமாகும்.

திருமாலுக்குகந்த மார்கழித்திங்களில் அநுஸந்திப்பதற்கென்றே விட்டுசித்தன் தூயதிருமகளாய் வந்து அரங்கனார்க்குத் துழாய்மாலை முடிசூடிக்கொடுத்தமாதாகிய ஆண்டாள் நேயமுடன் நமக்குத் திருப்பாவை முப்பதையும் தந்துகந்தாள். இவைகளை அநுஸந்தித்து செல்வத்திருமாலின் அருள்பெற்று நாம் இன்புறுவது என்பது நம்முடைய பூஜாபலனல்லவா.

இவ்விதமாக அநாதியான வேதங்களின் கருத்தை வடமொழியில் இதிஹாஸ புராணங்களின் மூலமாகவும், தென்மொழியில் திவ்ய ப்ரபந்தங்களின் மூலமாகவும், வால்மீகி, வ்யாஸ பராசரர்கள்போன்ற தபோதனர்களும், பூரணமாஜ்ஞானியர்களாய் அவதரித்த நம்மாழ்வார் போன்ற ஆழ்வாராசார்யர்களும் நமக்கு அநுக்ரஹித்தருளினார்கள். இவைகள் நமது ஸமூஹத்தில் உள்ள எல்லோருக்கும் பயன்படக்கூடியவைகளே. ஸர்வலோகஹிதத்திற்காகவே அருளப்பட்டவை. இப்படியிருக்க கலியின் கொடுமையினால் மொழிஸம்பந்தமான ஏற்றத்தாழ்வுகளும், இதிஹாஸ புராண திவ்யப்ரபந்தங்கள் ஸம்பந்தமாய் அவநம்பிக்கையும் அவதூறுகளும், மற்றொருபுறம், உத்ஸாஹாதிசயமும் இடையிடையே தோன்றுவதும் மறைவதும் இயல்பாயிருப்பதை நாம் காண்கிறோம். நமது நாட்டில் பல பாகங்களில் புராணப்ரவசனங்களும், திருப்பாவை உபந்யாஸங்களும் வெகுவாகப் பயனளிப்பதையும், அதே ஸமயம் புராணங்களை இழிவுபடுத்த முயலுவதையும் நாம் நேரில் காண்கிறோம். உலகில் நேர் மாறான கொள்கைள் தோன்றுதல் இயல்பே. ஒருவன் 'உண்டு' என்றால், மற்றொருவன் 'இல்லை' என்பது ஸஹஜமாகிவிட்டது. நல்லோர் சொல்வதை ஒப்புக்கொள்வதென்பது ஒழிந்தே வருகிறது. இதுதான் அறிவு வளர்ச்சி என்று நவீனத்தோர் கூறுவர். நமது அறிவுக்கு எல்லையுண்டு என்று தன்னடக்கத்துடன் இருந்த பெரியோர்கள் நாட்டில் பெரியோர்கள் மொழிகளுக்கு மதிப்பிருந்தது. தன் அறிவே சாலச்சிறந்தது என்று மதியீனத்தினாலும், அகந்தையினாலும் எண்ண ஆரம்பித்த நவீனத்தவர்கள்காலத்தில் அறிவாளிகள் சொல்லும் வாக்கியங்களில் அவநம்பிக்கையும், தன் சிந்தனாசக்தியில் ஒரு அகந்தையும் தலைதூக்கி நிற்கிறது. இதன் பயன்தான் ஸமீபத்தில்

காணப்படும் ஸமூஹ இழிவுப் படலங்கள்.

ஸமூஹத்தின் உண்மையான முன்னேற்றத்தை விரும்புகிறவர்கள், நமது அறிவின் குறைவை உணர்ந்தும், பாடுபட்ட. பண்டை காலத்து ஜ்ஞாநிகளின் வார்த்தைகளுக்கு மதிப்பையும் கொடுத்து நமது வாழ்க்கையை செம்மைப்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியம். பக்தி பாடல்களையும் ஆங்காங்கு எடுத்துரைத்து நடுநிலையில் உள்ளவர்களை நமது வழிக்குக் கொண்டுவர நாம் பாடுபடவேண்டும். நற்கொள்கைகளுக்கும், அவைகள் பொலிந்து கிடக்கும் புராணங்களுக்கும் அவதூறு கூறுவதென்பது ஸமீபத்தில் ஏற்பட்டதல்ல. ஸ்ரீராமபிரானின் முன்னிலையிலேயே நாஸ்திகவாதத்தை 'ஜாபாலி' என்ற தபோதனர் மொழிந்ததாக நாம் படிக்கவில்லையா? ஸ்ரீராமபிரானின் கடுஞ்சொல்லால் உண்மையை அவரே ஒப்புக்கொள்ளவில்லையா. நாளடைவில் இதுமாதிரி மாறுதல்கள் தோன்றியும் மறைந்தும் வந்தன. அதுமாதிரிதான் இக்காலத்தில் காணப்படும் செய்கைகளும் வாதங்களுங்கூட. இவைகளைப் பார்த்தும் கேட்டும் நாம் கஷ்டப்படுவதில் மாத்திரம் பலன் ஏற்படாது. நமது வாழ்க்கையில் புராதன கொள்கைகளை நாம் சித்தரித்துக் காட்டுதல் அவச்யம். இத்துடன் அப்பழக்க வழக்கங்களையும், அவைகள் கூறப்பட்டுள்ள இதிஹாஸ புராணங்களையும், ஆழ்வாராசார்யர்களின் திவ்யஸூக்திகளையும் ஆங்காங்கு ப்ரவசனம் செய்யவும் வேண்டும். இப்படிச் செய்வதில் எதிர்ப்புத் தோன்றினும் நாளடைவில் எதிர்ப்பு மறையவும் வழி உண்டு. பலர் நல்வழிக்கு வருவதற்கு நாம் பாடுபட்டவர்களாகவும் ஆவோம். இறைவன் கலியாண குணங்களையே உரைக்கின்ற மாஜ்ஞானிகளின் கடாக்ஷவிசேஷத்தினால் நாம் நற்கார்யங்களில் எக்காலும் ஈடுபட்டிருந்தால் நமக்கு இவ்வுலகிலும் எவ்வுலகிலும் நற்கதியுண்டென்பதில் ஐயமில்லை.

*   *   *   *   *   *   *

ஸ்ரீமதஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனு லாரம்பிக்கப்பட்ட ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ் ஸமீபத்தில் ஸ்ரீமதழகியசிங்கரின் ஸஞ்சாரத்தில் நரஸிம்ஹபுரத்தில் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது. ஸ்ரீராமாநுஜ தர்சனத்தில் பாடுபட நம் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு இது ஒரு உத்ஸாஹ வழியாகிறது. ஸ்ரீமதழகியசிங்கரின் திருவுள்ளத்திற்குவப்ப நமது ஸம்ப்ரதாயத்தில் பல சிறுவர்களுக்கு ஸாஹித்யஜ்ஞாநமும், பிறகு ஶாஸ்த்ராப்யாஸமும், அதன்பிறகு ஸம்ப்ரதாயஜ்ஞாநமுமேற்பட்டதென்றால் இம்மஹானின் பரமோபகாரத்தினாலல்லவா. மேன்மேலும் இவ்வுயர் நோக்கம் பல கிளைகளுடன் செழித்தோங்கி வருவதை நாம் கண்டுகளித்து அதன் முழுப்பலனையும் அநுபவிக்கும் காலமும் இதுவே என்றால் இதுவும் நமது பாக்ய விசேஷத்தினாலல்லவா.

ஸ்ரீமாலோல வித்வத்ஸதஸ்

சென்ற வருஷம்போல் இவ்வருஷமும் திருவுள்ளூர் ஸ்ரீமதழகியசிங்கர் ப்ருந்தாவனத்திலும் பத்து தினங்கள் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் விமர்சையாக நடக்குமென்று நாம் அறிகிறோம்.

தந்தி : "பத்மா" ஸ்தாபிதம் 1916 போன் நெ. 219

கல்யாண காலத்தை முன்னிட்டு
மிகவும் குறைந்த
ஒரே விலை விற்பனை

கண்ணைக் கவரும் பார்டர்களில் எல்லாவிதமான

பட்டு அண்டு நூல்

ஜவுளிகள் மிகவும் சிறந்த
நாகரீகமான வகையில்
ஸ்டாக் செய்துள்ளோம்.

கோபால பத்ம விலாஸ்

இப்பொழுதே எங்கள் கடைக்கு
நேரில் விஜயம் செய்து வாங்கி
திருப்தி அடைய கோருகிறோம்

புரொப்ரைட்டர்ஸ்:

S. N. பத்மநாப செட்டியார்,
P. R. ஜெயகோபால் செட்டியார்,
S. P. ராமநாதன்.

385, பஜார் வீதி, சேலம்.

P. B. No. 21

श्रीः

॥ श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

ப க வ த் த்ய ா நு ஸோ ப ா நம்

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

अन्तर्ज्योतिः किमपि यमिनामञ्जनं योगदृष्टेश्चिन्तारत्नं सुलभमिह नः सिद्धिमोक्षानुरूपम् ।
दीनानाथव्यसनशमनं दैवतं दैवतानां दिव्यं चक्षुःश्रुतिपरिषदां दृश्यते रङ्गमध्ये ॥

[அந்தர்ஜ்யோதி: கிமபி யமிநாமஞ்ஜநம் யோகத்ருஷ்டே:
சிந்தாரத்நம் ஸுலபமிஹ நஸ்ஸித்திமோக்ஷாநுரூபம் ।
தீநாநாதவ்யஸநஶமநம் தைவதம் தைவதாநாம்
திவ்யம் சக்ஷுச்ச்ருதிபரிஷதாம் த்ருச்யதே ரங்கமத்யே ॥] 1

(பதவுரை) கிமபி– ஓர், (வர்ணிக்கமுடியாத) யமிநாம்– யோகிகளுடைய, அந்தர்ஜ்யோதி:– ஹ்ருதயத்திலிருக்கும் தேஜஸ்ஸாயும், யோகத்ருஷ்டே:– த்யாநமாகிற கண்ணுக்கு, அஞ்ஜநம்– மைபோன்றதாயும், ஸித்தி– தர்மார்த்தகாமங்களுக்கும், மோக்ஷ– மோக்ஷத்திற்கும், அநுரூபம்– தகுந்ததாயும், இஹ– இந்த லோகத்தில், ந:– நமக்கு, ஸுலபம்– ஸுலபமாய் கிடைக்கக்கூடியதாயு மிருக்கிற, சிந்தாரத்நம்– சிந்தாமணியாயும், தீநாநாத– வேறு உபாயமில்லாமையால் அகிஞ்சநர்களாயும், வேறு ரக்ஷகர்களில்லாமையால் அநந்யகதிகளாயுமிருக்கிற ப்ரபந்நர்களுடைய, வ்யஸந– ஸம்ஸாரக்லேசத்தை, சமநம்– போக்கடிப்பதாயும், ச்ருதிபரிஷதாம்– வேதஸமூஹங்களுக்கு, திவ்யம் - விலக்ஷணமான, சக்ஷு:– கண்போல் ஆதரிக்கத்தகுந்ததாயுமிருக்கிற, தைவதாநாம்– எல்லா தேவதைகளுக்கும், தைவதம்– உயர்ந்த தேவதை, (ஸ்ரீரங்கநாதன் என்றபடி) ரங்கமத்யே – ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தின் நடுவில், (நர்த்தநஸ்தலத்தின் நடுவில்) த்ருச்யதே– காணப்படுகிறது.

(கருத்து) ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹமாயும், ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரராயும், ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யாஜ்ஞையினால் 'வேதாந்தாசார்யன்' என்கிற பிருதை யடைந்தவருமான தூப்புல்வள்ளல், பகவானை த்யாநம் செய்பவர்களுக்கு மிகவும் உபகாரமாக ஸ்ரீரங்கநாதனைத் திருவடி முதல் திருமுடி வரை வர்ணிக்கத் திருவுள்ளம் பற்றி முதலில் வஸ்து நிர்தேசரூபமான மங்களத்தை யருளிச்செய்கிறார். யோகிகளுடைய ஹ்ருதய கமலத்தில் தேஜோமயமான திவ்ய விக்ரஹத்தை யுடையதும், த்யாநமாகிற கண்ணுக்கு மை போல் ப்ரகாசத்தை உண்டு பண்ணக்கூடியதாயும், தர்மார்த்தகாமமோக்ஷங்களாகிற நான்குவித புருஷார்த்தங்களையும்

அடைவதற்காக பகவானையே ஆச்ரயிக்கிற ஏகாந்திகளுக்கும் பரமைகாந்திகளுக்கும், அந்தந்த பலத்தைப் பெறுவதற்கு அநுகுணமாய் இவ்வுலகிலேயே ஸுலபமான சிந்தாமணிபோன்றதாயும், (தேவலோகத்தில் உள்ள சிந்தாமணி என்கிற ரத்நம் அர்த்தகாமங்களைக் கொடுக்கக் கூடியதாயினும் மோக்ஷத்திற்கு உபயோகமில்லாமையாலும் இவ்வுலகில் கிடைக்காததாயுமிருப்பதால் அதைக்காட்டிலும் இது விலக்ஷணமென்று தாத்பர்யம்.) கர்மயோக, ஜ்ஞாநயோக, பக்தியோகரூபமான உபாயத்திற்கு சக்தியற்றவர்களாய், பகவானைத் தவிர வேறு தேவர்களை ஆச்ரயிக்காமல் பகவானையே சரணமாகப் பற்றினவர்களுக்கு ஸம்ஸாரக்லேசத்தைப் போக்கக்கூடியதாயும், வேதங்களுக்கு ப்ரதிபாதிக்கும் விஷயத்தில் ப்ரதாநமாய் ஆதரிக்கத்தகுந்ததாயும் மற்றெல்லாதேவதைகளுக்கும் மேற்பட்ட தேவதையான பரப்ரஹ்மம் ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தின் மத்தியில் மாம்ஸசக்ஷுஸ்ஸுக்களான நம்போன்றவர்களுக்கும் ப்ரத்யக்ஷீகரிக்கும்படி காணப்படுகின்றது. இதில் ‘தைவதாநாம் தைவதம்’ என்பதால் பரத்வமும், ‘ரங்கமத்யே த்ருச்யதே’ என்பதால் ஸௌலப்யமும் சொல்லப்பட்டது.

மேல் எட்டு ச்லோகங்களால் ‘ஆபீடாந்மௌளிபர்யந்தம் பச்யத: புருஷோத்தமம்। பாதகாந்யாசு நச்யந்தி கிம் புநஸ்தூபபாதகம்’ (பீடத்திலிருந்து திருமுடி பர்யந்தம் பகவானை ஸேவிக்கிறவர்களுக்கு மஹாபாதகங்களும் உடனே நாசமடைகின்றன. உபபாதகங்கள் நாசமடைவதற்குக் கேட்கவேண்டுமோ) என்கிற க்ரமத்தை அநுஸரித்து திருவடி முதல் திருமுடிவரை திவ்யமங்களவிக்ரஹத்தை தாம் ஸேவித்து அநுபவித்து, அவ்விதமே வர்ணிக்கப் போகிறவராய் அடுத்த ச்லோகத்தில் திருவடியை அநுபவிக்கிறார்:—

वेलातीतश्रुतिपरिमळं वेधसां मौलिसेव्यं प्रादुर्भूतं कनकसरितस्सैकते हंसजुष्टे ।
लक्ष्मीभूम्योः करसरसिजैर्लालितं रङ्गभर्तुः पादाम्भोजं प्रतिफलति मे भावनादीर्घिकायाम् ॥

[வேலாதீதச்ருதிபரிமளம் வேதஸாம் மௌளிஸேவ்யம்
ப்ராதுர்பூதம் கநகஸரிதஸ்ஸைகதே ஹம்ஸஜுஷ்டே।
லக்ஷ்மீபூம்யோ: கரஸரஸிஜைர்லாளிதம் ரங்கபர்த்து:
பாதாம்போஜம் ப்ரதிபலதி மே பாவநாதீர்க்கிகாயாம் ॥] 2

(ப-ரை) வேலாதீத- எல்லையில்லாத, ச்ருதி- வேதங்களை, பரிமளம்- பரிமளமாய் உடையதாயும், வேதஸாம்- ப்ரஹ்மாக்களுடைய, மௌளி- சிரஸ்ஸுக்களால், ஸேவ்யம்- நமஸ்கரிக்கத்தக்கதாயும், (சிரஸ்ஸுகளில் தரிக்கத்தகுந்ததாயும்) ஹம்ஸஜுஷ்டே- பரமஹம்ஸர்களால் (ஹம்ஸபக்ஷிகளால்) ப்ரீதியுடன் அடையப்பட்ட, கநகஸரித:- காவேரியின், ஸைகதே- மணலில், (ஜலத்துடன் கூடின மணலில்) ப்ராதுர்பூதம்- ஆவிர்பவித்ததாயும், (உண்டானதாயும்) லக்ஷ்மீபூம்யோ:- ஸ்ரீதேவிபூதேவிகளுடைய, கரஸரஸிஜை:- தாமரைப்புஷ்பம் போன்ற கரங்களால்; லாளிதம் - மெதுவாக வருடப்பட்டதாயுமிருக்கிற, ரங்கபர்த்து: பாதாம்போஜம் - ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரை, மே- என்னுடைய, பாவநாதீர்க்கிகாயாம்- த்யாநமாகிற வாபியில், ப்ரதிபலதி- ப்ரதிபலிக்கிறது.

(கரு) பகவானுடைய திருவடியை சைத்ய, ஸௌகந்த்ய, ஸௌகுமார்யங்களால் தாமரைப்புஷ்பமாக அநுபவிக்கிறார்— புஷ்பத்தின் உயர்த்தியை அதின் வாஸனை எப்படி ப்ரகாசிப்பிக்கிறதோ அப்படியே அநந்தமான வேதங்கள் இந்த திருவடியின் உத்கர்ஷத்தை வெளிப்படுத்துகின்றன. தாமரைப்புஷ்பம் சிரஸ்ஸில் தரிக்கத்தகுந்தது. இந்தத்திருவடி ப்ரஹ்மாக்களின் முடிகளால் ஸேவிக்கத்தகுந்தது. தாமரைப் புஷ்பம் சேற்றில் உண்டானதாய் சிற்றின்பத்திலீடுபட்ட புருஷர்களால் அநுபவிக்கப்படுவதாயும் ஹம்ஸங்களால் அடையப்பட்டதாயுமிருக்கும். திருவடித்தாமரையோ மிகவும் விரக்தர்களான பரமஹம்ஸர்களினால் ப்ரீதியோடு அடையப்பட்ட காவேரியின் மணலில் உண்டானதாயிருக்கிறது. மேலும் இந்தத்திருவடி ஸ்ரீ பூதேவிகளால் தங்களுடைய ஸுகுமாரமான திருக்கைகளால் கொஞ்சம் அழுத்திப்பிடித்தால் அதிம்ருதுவான திருவடிகள் வாடிவிடுமோவென்று சங்கையினால் மெதுவாக வருடப்படுகிறது. இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனுடைய திருவடி, தாமரைப்புஷ்பம் நடவாபியில் ப்ரதிபலிப்பதுபோல் என் த்யாநத்தில் விஷயமாகிறதென்கிறார். இங்கு வேலாதீத........ என்கிறதினால் திவ்யஸௌகந்த்யமும், கநகஸரித:......... என்பதினால் சைத்யமும், ரமணீயதையும், லக்ஷ்மீபூம்யோ:......... என்பதால் ஸௌகுமார்யாதிசயமும் ஸூசிக்கப்பட்டது.

மேல் ச்லோகத்தால் கணுக்காலின் ஸௌந்தர்யத்தை யநுபவிக்கிறார்—

चित्राकारां कटकरुचिभिश्चारुवृत्तानुपूर्वां काले दौत्यद्रुततरगतिं कान्तिलीलाकलाचिम् ।
जानुच्छायाद्विगुणसुभगां रङ्गभर्तुर्मदात्मा जङ्घां दृष्ट्वा जननपदवीजाङ्घिकत्वं जहाति ॥

[சித்ராகாராம் கடகருசிபிச்சாருவ்ருத்தாநுபூர்வாம்
காலே தௌத்யத்ருததரகதிம் காந்திலீலாகலாசிம் |
ஜாநுச்சாயாத்விகுணஸுபகாம் ரங்கபர்த்துர்மதாத்மா
ஜங்காம் த்ருஷ்ட்வா ஜநநபதவீஜாங்கிகத்வம் ஜஹாதி ||] 3

(ப-ரை) கடகருசிபி:- தண்டைகளின் காந்திகளால், சித்ராகாராம்- நாநாவர்ணத்தோடு கூடின அமைப்பை யுடையதாயும், சாரு- அழகாயும், வ்ருத்த- உருண்டதாயும், அநுபூர்வாம்- மேல் அவயவங்களுக்குத் தகுந்தாற்போலமைந்ததாயும், காலே- (பாண்டவர்களால் ஸமாதாநஞ்செய்ய அனுப்பப்பட்ட) காலத்தில், தௌத்யத்ருததரகதிம்- தூதக்ருத்யத்தில் மிகவும் வேகமான நடையை யுடையதாயும், காந்தி- காந்திக்கு, லீலாகலாசிம்- லீலார்த்தமான ஆதாரபாத்ரமாயும், ஜாநுச்சாயா- முழங்கால்களுடைய காந்திகளால், த்விகுண- இரட்டிப்பாக, ஸுபகாம்- அழகுள்ளதாயுமிருக்கிற, ரங்கபர்த்து: ஜங்காம்- ஸ்ரீரங்கநாதனுடைய கணுக்காலை, த்ருஷ்ட்வா—ஸாக்ஷாத்கரித்து, மதாத்மா- என்னுடைய ஆத்மா, ஜநநபதவீ- ஸம்ஸாரமார்க்கத்தில், ஜாங்கிகத்வம்- வேகமாய் ஓடுதலை, ஜஹாதி- விடுகிறது.

(கரு) முன் ச்லோகத்தில் திருவடியை யநுபவித்து இதில் கணுக்காலை முழங்காலுடன் சேர்த்து அநுபவிக்கிறார்— நாநாரத்நங்களால் இழைக்கப்பட்ட தண்டைகளின் காந்திகள் (கணுக்காலில்) பரவியிருப்பதனால் நாநாவிதவர்ணங்களையுடையதாயும், அழகாய் உருண்டு

மேல் அவயவங்களுக்குத் தகுந்தாப்போல் அமைந்த ஸந்நிவேசத்தை யுடையதாயும், பாண்டவர்களால் அனுப்பப்பட்ட காலத்தில் துர்யோதனனிடம் தூது செல்வதாகிற நீசகார்யத்திலும் ஆச்ரிதவாத்ஸல்யத்தினுல் மிகவும் த்வரை உள்ளதாயும், காந்திகளுக்கு ஆதாரமான பாத்திரம்போன்றதும், முழங்கால்களுடைய சோபையும் சேர்ந்திருப்பதால் இரட்டிப்பான சோபையை யுடையதாயுமிருக்கிற ஸ்ரீரங்கநாதனுடைய கணுக்காலை ஸேவித்து, மேன் மேலும் பாபகர்மங்களைச் செய்து ஸம்ஸாரமார்க்கத்தில் ஓடித்திரியும் ஸ்வபாவமுள்ள என்னுடைய ஆத்மா, ‘ஆச்ரிதவாத்ஸல்யத்தினுல் நீசக்ருத்யத்தையும் மேற்கொண்டு அதிவேகமாய்ச் செல்லும் ஸ்வபாவமுள்ள பகவானுடைய கணுக்கால், நாம் ஸம்ஸாரத்தில் ஓடினுல் பின்தொடர்ந்து வந்து தன்னைத் திருப்பிவிடும் என்கிற எண்ணத்தால் அதை (ஸம்ஸாரமார்க்கஸஞ்சாரத்தை) அறவே விட்டுவிட்டது’ என்கிறுர்.

இப்படி முழங்காலையும் கணுக்காலையுமநுபவித்து ஊருயுக்மத்தை (திருத்துடைகளை) அநுபவிக்கிறுர் அடுத்த ச்லோகத்தில்—

कामारामस्थिरकदलिकास्तम्भसंभावनीयं क्षौमाश्लिष्टं किमपि कमलाभूमिनीलोपधानम् ।
न्यञ्चत्काञ्चीकिरणरुचिरं निर्विशत्यूरुयुग्मं लावण्यौघद्वयमिव मतिर्मामिका रङ्गयूनः ॥

[காமாராமஸ்திரகதளிகாஸ்தம்பஸம்பாவநீயம்
க்ஷௌமாச்லிஷ்டம் கிமபி கமலாபூமிநீளோபதாநம் |
ந்யஞ்சத்காஞ்சீகிரணருசிரம் நிர்விசத்யூருயுக்மம்
லாவண்யௌகத்வயமிவ மதிர்மாமிகா ரங்கயூநஃ ||] 4

(ப—ரை) காம- மன்மதனுடைய, ஆராம— உத்யாநவநத்தில், ஸ்திர— அசையாமலிருக்கிற, கதளிகாஸ்தம்ப— வாழைத்தண்டோவென்று, ஸம்பாவநீயம்— ஊஹிக்கத்தகுந்ததாயும், க்ஷௌம- பட்டுவஸ்திரத்தால், (பீதாம்பரத்தினுலென்றபடி) ஆச்லிஷ்டம்— சுற்றப்பட்டதாயும், கமலாபூமிநீளா— ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளுக்கு, கிமபி — ஒரு, (அநிர்வசனீயமான) உபதாநம்— தலையணையாயும், ந்யஞ்சத்— கீழே பரவியிருக்கிற, காஞ்சீகிரண— ஒட்டியாணத்தின் கிரணங்களால், ருசிரம்— மனோஜ்ஞமாயுமுள்ள, ரங்கயூநஃ ஊருயுக்மம்— ஸ்ரீரங்கத்தில் நித்யயுவாவாயிருக்கிற பகவானுடைய இரண்டு திருத்துடைகளை, மாமிகா மதிஃ— என்னுடைய புத்தி, (மனஸ்) லாவண்யௌகத்வயமிவ- லாவண்யநதியின் இரண்டு ப்ரவாஹம்போல், நிர்விசதி — அநுபவிக்கிறது.

(கரு) தன் ஸௌந்தர்யவிசேஷத்தினுல் புருஷர்களுக்கும் ஸ்த்ரீஸ்வபாவத்தை யுண்டாக்கி அவர்களுக்கு தன் விஷயத்தில் காமோத்ரேகத்தை ஸதா உண்டுபண்ணுவதால் மன்மதனுடைய உத்யாநவநத்தில் காற்று முதலானவைகளால் நாசமடையாமல் நிலையாயிருக்கும் வாழைத்தண்டோ வென்று ஊஹிக்கத்தகுந்ததும், பீதாம்பரம் சாற்றியதினுல் சீதளமாயும் அதிம்ருதுவாயும் அமைந்த ஸ்ரீ, பூமி, நீளாப்பிராட்டிமார்களுடைய ரதிச்ரமத்தைப் போக்கடிக்கக்கூடிய விலக்ஷணமான தலையணை போன்றதும், கடிப்ரதேசத்தில் (இடுப்பில்) சாற்றியிருக்கும் ஒட்டியாணத்தின் நாநாரத்நகாந்திகள் கீழேபரவி அதினுல் விசேஷ அழகுபெற்றதாயுமிருக்கிற ஸ்ரீரங்கரஸிகநித்யயுவாவான எம்பெருமானுடைய திருத்துடைகளை லாவண்யமாகிற நதியின் இரண்டு ப்ரவாஹங்களை உருவெடுத்ததோவென்று என் மனது ஈடுபடுகிறதென்கிறுர்.

ஸ்ரீ:

திருப்பாவைக்கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அதில் ஒரு விசேஷம். முலைக் காம்பில் கை வைத்த தத்க்ஷணமே பால் தாரை சரேலென்று வெகு வேகமாகப் பாத்திரத்தில் விழ ஆரம்பித்துவிடும். அந்த வேகத்தினால் உண்டான நுரையோடு பாத்திரத்தில் விழுந்த பால் பொங்கி மேலே எழும். பால் தாரை கீழ்முகமாகப் பாத்திரத்தில் விழ அதற்கு எதிராகப் பாத்திரத்திலுள்ள பால் பொங்கி எழும். கறப்பவர்கள் பாத்திரத்தை ஏந்திக் கறக்கும்போது பால் சிறிதும் கீழே சிந்தாமலிருக்க வேண்டுமென்று வெகு ஜாக்ரதையாக இருப்பார்கள். பாத்திரம் நிரம்பி மேல் வழியாமல் விளிம்புக்குக் கொஞ்சம் கீழ்வரையில் பால் வந்தவுடனேயே அந்த பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு மற்றொரு பாத்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணியிருப்பார்கள். ஆனால் அது அவர்களுக்கு ஸாத்யமாவதில்லை. இதோ கால் பாகம் நிறைந்தது. அரை பாகமாயிற்று, முக்கால் பாகம் வந்துவிட்டது என்று இவர்கள் கவனித்துப்பார்த்து நிச்சயிப்பதற்குள்ளேயே பாத்திரம் நிரம்பி மேலே வழிய ஆரம்பித்துவிடும். அவ்வளவு பெருந்தாரைகளாகவும் வேகமாகவும் ஒவ்வொரு பசுவும் பால் சொரியும். அதுவும் மாற்றாதே சொரியும். முதலில் ஏந்திய ஏழெட்டுப் பாத்திரங்கள் சீக்கிரமாக நிறைந்து போம்படி வேகமாகக் கறந்தது. பிறகு வரவரக் குறைந்தது என்று இவ்வித மாறுதலே இராமல் முதல் பாத்திரத்தில் எப்படியோ அப்படியே பத்தாம் பாத்திரத்திலும் அதற்கு மேற்பட்ட பாத்திரங்களிலும் கறந்தது. 'இவ்வித வள்ளல் பெரும்பசுக்களை ஆற்றப் படைத்தான் மகனே' என்று கூப்பிட்டாள்.

எண்ணிறந்த பசுக்களை கறப்பதற்கு வேலைக்காரர் எத்தனைபேர் இருந்தாலும் போதாமலிருந்தபடியினாலும் குல தர்மமான படியாலும் நந்தகோபரும் பசுக்களைக் கறப்பர். அதுபோலவே கிருஷ்ணனும் கறந்து பிதாவுக்கு உதவி செய்வர். இப்போது விடிந்து பசுக்களைக் கறக்கும் காலம் வந்துவிட்டபடியால், நீ உறங்குவது உசிதமன்று. 'ஆகையால் அறிவுறாய், விழித்துக்கொள் என்று குறிப்பாக அறிவித்தாள். கனவு கண்டுகொண்டு தூங்குவதற்கு ஸ்வப்பனமென்று பெயர். கனவு காணாது அறிவு என்பது சிறிதுமில்லாமல் அசேதநம்போல் ஆகித் தூங்குவதற்கு ஸுஷுப்தி என்று பெயர். அப்போது கிருஷ்ணன் இந்த ஸுஷுப்தி தூக்கத்திலிருந்தாராகையால் 'அறிவுறாய்' என்றாள். 'அறிவைப் பெறுவாய்', விழித்துக் கோள்வாய் என்றதாயிற்று.

இப்படி ஒருவருக்குப் புத்ரனாகப் பிறந்து விளையாடுகின்ற ஸர்வேச்வரனை உள்ளபடி அறியமாட்டாமல் பலர் அபசாரப் படுவர். இவ் வுலகத்திலுள்ளோர்க்குத் தனது ரூபத்தை நேரில் காண்பிக்கவேண்டுமென்றால் ஸர்வேச்வரன் மனுஷ்ய ரூபத்திலேயே வர வேண்டியிருக்கின்றது. மனுஷ்ய ரூபத்தில் வந்தால் மூட ஜனங்கள் மற்றவரைப்போலவே அவனையும் ஒரு மனிதனாக எண்ணி விடுகின்றார்கள், இதைப்பற்றி பகவானே வருத்தப் பட்டுப் பேசியிருக்கிறான். 'அத்ருஷ்ட வசமாக இந்த நிலையில் தாங்களில்லை. பரம கருணையோடு வந்து அவதரித்திருக்கும் ஸ்ரீமந் நாராயணனே அவன் என்ற நிச்சய முள்ளவர்கள் தாம்' என்று நாயகப்பெண் மிகுந்த த்ருப்தி உடையவள். இவ்வித நிச்சயத்தை ஆரம்பத்திலேயே இவள் வெளிப்படுத்தியிருக்கின்றாள். மறுபடியும் நந்தகோபர் புத்ரனாக ஸ்ரீகிருஷ்ணனைக் கூறிய இந்த இடத்தில் அவன் ஸர்வேச்வரனே என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியது அவச்யமென்று கருதினாள். தவிரவும் அடுத்தபடியாக அவனிடத்தில் சரணாகதி பண்ணப் போகின்றாளாகையால் அதை ஏற்றுத் தங்களுடைய மனோரதங்களையெல்லாம் பூர்த்தி பண்ணுவதற்கு வேண்டிய ஸகல கல்யாண குணங்களும் நிறைந்தவன் அவன் என்பதைச் சொல்லவேண்டியது அவச்யமாயிற்று. ஆகையால் இவ்விஷயங்களை வெகு ஸாமர்த்யமாகவும் வெகு அழகாகவும் குறிப்பிட்டு அழைத்து மறுபடியும் எழுப்புகிறாள்:—

ஊற்றமுடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்.

ஸர்வேச்வரனே பரப்ரஹ்மமெனப்படுகின்றான். இவனுடைய பெருமையை உள்ளபடி உலகிற்கு உபதேசிக்கவந்த உபநிஷத்துக்கள் அவன் உலகத்தை ஸ்ருஷ்டிப்பதையும் காப்பதையும் அழிப்பதையும் விவரித்துப் பேசுகின்றன. ப்ரளய காலத்தில் சித் என்கிற ஜீவாத்மாவும் அசித் என்கிற ஜடப் பொருளும் நாமரூபமில்லாமல் அதாவது பெயரும் உருவமுமில்லாமல் வெகு ஸூக்ஷ்மமான நிலையில் இருக்கின்றன. ஜீவாத்மாக்கள் அறிவுள்ள பொருள்களானாலும் அப்போது அறிவற்ற ஜடப்பொருள்கள் போலவே கிடக்கின்றன. இந் நிலையில் அவை இருப்பதைப் பார்த்து பகவான் 'அய்யோ, இவை இப்படிக் கிடக்கின்றனவே' என்று நிர்வேதப்படுகின்றான். பிறகு 'மறுபடியும் இவற்றுக்குக் கரண களேபரங்களை (சரீரத்தையும் கண், காது, கை, கால் முதலிய கருவிகளையும்)கொடுப்போம். வேதம் முதலிய சாஸ்திரங்களையும் உபதேசிப்போம். அவற்றைக் கொண்டு 'இக் காரியங்களைச்செய்யலாம், இவற்றைச் செய்யக் கூடாது' என்கிற விவேகத்தைப் பெற்று செய்யக்கூடாதவற்றை விலக்கிச் செய்யவேண்டியவற்றைச் செய்து நல்ல கதியை அடையட்டும்' என்று அவைகளிடத்தில் மிகுந்த கருணை கொள்ளுகின்றான். 'அப்படிச் செய்தே தீருவது' என்று விசேஷ அபினிவேசம் கொள்ளுகின்றான். இந்த அபிநிவேசமே ஊற்றமெனப் படுகின்றது. இருக்கிறதென்றே சொல்ல முடியாதபடி அவ்வளவு நுட்பமாய் அதாவது ஸூக்ஷ்மமாயிருக்கின்ற அசித்து (ப்ரக்ருதி) அவனது ஸங்கல்பத்தினால் க்ரமமாக, மஹத் அஹங்காரம் தந்மாத்ரை, ஆகாசம் முதலிய ஐந்து பூதங்கள் என்ற இந்த அவஸ்தைகளை அடையும்படிப் பெரிதாகின்றது. இப்படி ஸூக்ஷ்மமாயிருப்பது என்கின்ற நிலை மாறிப் பெரிதாவது என்கிற தன்மை அசித்தினிடத்திலேயே ஸாக்ஷாத்தாக உள்ளது. ஆயினும் எந்த நிலையிலும் எல்லாப் பொருளும் பகவானுடைய உடலாகவே இருக்கின்றதாகையால் உடலாகிய இப்பொருள்களிலிருக்கும் தன்மையெல்லாம் பகவானிடத்திலேயே இருப்பதாகப் பேசுவது பொருந்தும். ஆகவே ப்ரக்ருதி ஸ்தூலமானபோது பகவானே ஸ்தூலனானான். பெரியவனானான்; எனலாம்.

ப்ருக்ருதியின் ஸ்தூல ரூபங்களான ஆகாசம் முதலிய ஐந்து பூதங்கள் சேர்ந்து இந்தப் பூலோகம் மேல் லோகம் எல்லாவற்றையும் உண்டாக்குகின்றன. அவற்றைக் கொண்டு இவ்வுலகங்களைப் பகவான் ஸ்ருஷ்டிக்கின்றான். பிறகு அவற்றில் வஸிக்கும் தேவர், மனிதர், ப்ராணிகள், மரம் கொடி செடி முதலியனவைகளைப் படைக்கின்றான். இவ் வுருவங்களுக்குள்ளிருந்து ஜீவாத்மாக்கள் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. இவ் வாத்மாக்களுக்கும் உள் ஆத்மாவாய் பகவான் இருக்கின்றான். தேவன், மனிதன், பசு, பக்ஷி, மரம் என்ற இந்த வேற்றுமைகள் யாவும் உடலைப் பற்றியவை. இப்படி வெவ்வேறு பெயருள்ள வெவ்வேறு ரூபங்களை உண்டாக்கி அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஜீவாத்மாவை ஆத்மாவாக இருக்கச்செய்து அதற்கும் ஆத்மாவாகத் தான் இருந்துகொண்டு இருக்கின்றான் எம்பெருமான். ஆகையால் உலகத்தில் தோன்றி நிற்கும், அதாவது நாம் காணும் வஸ்துக்களெல்லாம் பகவானே. அவனே உலகினில் தோற்றமாய், நாம் காணும் எல்லாப்பொருளுமாய் நிற்கின்றவன்.

ஜீவாத்மாக்கள் இயற்கையாய்த் தமது ஸ்வரூபத்தில் எவ்வித அழுக்கும் இல்லாதவைகள் பகவத் ஸ்வரூபம் போன்றே இருப்பவைகள். ஆயினும் அநாதியாய் ஏற்பட்ட சரீர ஸம்பந்தத்தாலே ஸுக துக்கங்களை அநுபவித்து வருகின்றன. இந்த சரீரத்திற்குள்ளே நாம் இருந்து பல அனுபவங்களைப் பெறுகின்றோம். இதற்குள்ளேயே நம்மோடு பகவானும் இருக்கின்றானென்றால் நமக்குப் போலவே அவனுக்கும் இந்தச் சரீர ஸம்பந்தத்தினால் இன்ப துன்ப அநுபவங்கள் உண்டாகாதோ? அவை உண்டானால் அவனும் நம்மைப்போல் ஒரு ஜீவாத்மாவாக இருக்கவேண்டுமேயன்றி பகவான் என்பது எப்படி? என்று ஸந்தேஹம் இங்கு எழுகின்றது. இதற்குச் சாஸ்திரங்கள் ஸமாதானம் கூறுகின்றன. அவன் எந்தவிடத்தில் இருந்தாலும் அந்த இடம் நிமித்தமாக எவ்வித மாறுபாடும் அவனிடத்தில் உண்டாகாது. அவ்விதப் பெருமை வாய்ந்தவன் அவன். இப்படி அவனிடத்தில் ஒரு குற்றமும் ஒட்டாது என்பது மாத்திரமல்ல. அந்தந்த பொருள்களுக்கும் அந்தர்யாமியாயிருந்து நியமநம் செய்து மேல்மேலும் விளங்குகின்றவன் அவன். அவன் ஒரு தனிச்

199554

சுடர். விளங்கிக்கொண்டிருப்பதே அதன் ஸ்வபாவம். எதனாலும் அது மங்காது.

இவ்வர்த்தங்களில் **'प्रजापतिर्वै प्रजाकामः, स एकाकी न रमेत'** என்ற இவைபோன்ற உபநிஷத்வாக்யங்கள் ஊற்றத்தையும், **'तदैक्षत बहुस्यां प्रजायेयेति । तत्तेजोऽसृजत। तत्तेज ऐक्षत बहु स्यां प्रजायेयेति । तदपोऽसृजत । ता आप ऐक्षन्त बह्वः स्याम प्रजायेमहीति । ता अन्नमसृजन्त'** என்றஇவைபோன்றவை பெரிதானதையும், **'सेयं देवतेमास्तिस्रो देवता अनेनैव जीवेनात्मनाऽनुप्रविश्य नाम रूपे व्याकरोत् । तासां त्रिवृतं त्रिवृतमेकैकामकरोत्'** என்ற இவைபோன்றவை உலகனில் தோற்றமாய் நிற்பதையும் **'अनश्नन्नन्यो अभिचाकशीति'** என்ற இதுபோன்றவை சுடராயிருக்கும் தன்மையையும் உபதேசிக்கின்றன. ஆகையால் இவற்றையே கருத்தில் வைத்து இப்பெருமைகளைச் சொல்லும் சொற்களையே இட்டு நாயகப்பெண் ஸ்ரீக்ருஷ்ணனை எழுப்பினாள். இப்படி உலகத்திற்குக் காரணமான ஸர்வேச்வரனாயிருக்குந் தன்மையையும் அதன் மூலமாகக் கருணை முதலிய குணங்களையும் அறிவித்தாள். கருணையினாலேயே உலக ஸ்ருஷ்டி என்பதை

अचिदविशिष्टान्प्रळये जन्तूनवलोक्य जातनिर्वेदा ।
करणकळेबरयोगं वितरतु वृषशैलनाथकरुणे त्वम् ॥

என்று நமது ஆசார்ய ஸார்வபௌமன் ஸ்பஷ்டமாக ஸாதித்திருக்கின்றார். இப்படி மிகுந்த அருமையும் சிறப்பும் வாய்ந்த பொருள்களைக் கொண்ட சொற்களால் அழைத்து 'துயிலெழாய்' என்று வேண்டினாள். முன் 'அறிவுறாய்' என்றாள். விழித்துக் கொண்ட பிறகும் அதாவது அறிவுற்ற பிறகும் படுத்துக் கொண்டே இருக்கலாம். இந் நிலையை விட்டு உட்காரும் நிலைக்கு வரவேண்டுமென்று இத்தால் வேண்டுகின்றாள். துயில் தூங்குவதற்குக்காரணமான சயன நிலை. அதிலிருந்து எழு, என்றபடி.

எம்பெருமானுடைய ஒவ்வொரு நிலையையும் ஒவ்வொரு செய்கையையும் அநுபவிப்பது மிகுந்த பக்தியுள்ளவர்களுக்குப் பேரின்பத்தைத் தரும். நாயகப்பெண் அவ்விதமாகவே ஸ்ரீக்ருஷ்ணன் விஷயத்தில் அப்போது அநுபவத்தைப் பெற ஆசைப்பட்டு முயன்றாள். ஸுஷுப்தியிலிருந்து அவன் அறிவு பெறுவதை த்யானம் செய்தாயிற்று. பிறகு தலையணையிலிருந்து திருமுடியைத் தூக்கி எழுந்து உட்காருவதையும் நினைத்தாயிற்று. இதற்குப் பிறகு அதுவரையில் மூடியிருந்த அவனுடைய திருக்கண்கள் மலரும் அழகை அநுபவிக்கவேண்டும். இதில் ஒரு விசேஷம். மற்ற அவயவங்கள் போன்றவை அல்லன திருக்கண்கள். திருமார்பை ஸேவிக்கின்றோம். நீண்ட புஜங்களை ஸேவிக்கின்றோம். நாம் ஸேவிக்க ஸேவிக்கக் கண்ணை அவற்றை விட்டு எடுக்க முடியாதபடி அவ்வளவு அழகாயிருந்து நமக்கு அவை மிகுந்த இன்பத்தைத்தருகின்றன என்ற இவ்வளவேயல்லது நம் விஷயத்தில் அவை செய்வது ஒன்றுமில்லை. கண்களோ வெனில் நாம் தூரத்தில் வரும்போதே நம்மைப் பார்த்து எம்பெருமானுடைய கருணையை நம்மேல் பொழிந்து நமக்குப் பெரும் க்ஷேமத்தை விளைவிக்கின்றன. ஆகவே எம்பெருமான் தூக்கம் நீங்கி எழும்போது மலரும் கண்களின்பார்வைமுதலில் தம்மேலேயே விழவேண்டுமென்று நாயகப்பெண் ஆசைப்பட்டாள். கண் விழிக்கும்போது பகவான் வேறு யாரையாவது பார்த்துவிட்டால் இவளுடைய இந்த ஆசை நிறைவேறாது. அதனால் முதல் கடாக்ஷத்தைத் தம்மேலேயே செலுத்த வேண்டுமென்று எம்பெருமானை ப்ரார்த்திக்கின்றாள். இது எளிதாகக் கிடைக்கக் கூடிய ஒரு சிறு பயனன்று. பின் எவ்வளவோ புண்ணியம் செய்த மகாத்மாக்களே அடையக் கூடியதொன்று. அந்த விசேஷத்தை நன்றாக அறிந்தவளாகையால் நாயகப்பெண் தவறாமல் அந்த பெரும்பேற்றைப் பெறக்கருதி அதற்கு உபாயமாக எம்பெருமானிடத்தில் சரணாகதி பண்ணுகிறாள்.

சரணாகதியில் முக்கியமான அம்சம் அகிஞ்சநத்வம். அதாவது விரும்பிய பலனைத் தரக்கூடிய உபாயத்தை அநுஷ்டிக்கச் சக்தியில்லாமலிருப்பது. உக்ரமான தபஸ்ஸையோ பக்தியோகத்தையோ செய்யச் சக்தி உள்ளவர்கள் அதைச் செய்து எம்பெருமானுடைய அநுக்ரஹத்தைப் பெறலாம். அதில் சக்தியற்றவர்கள் "நான் அசக்தன். தபஸ்ஸையோ பக்தியையோ நான் அநுஷ்டிக்க முடியாது. உனது அபார கருணையாலே நீயே அந்த உபாய ஸ்தானத்திலிருந்து பலத்தைக் கொடுக்க வேணும்" என்று எம்பெருமானிடத்தில் கெஞ்சிக் கேட்கவேண்டும். இதுவே சரணா

சுதியாம். இப்படி ஒருவன் தனது அசக்தியைச் சொல்லித் தனது எளிய நிலையை வெளிப்படுத்துவது கார்பண்யமெனப்படுகின்றது. இந்தக் கார்பண்யம் ஒருவனிடத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு எம்பெருமானுடைய காருண்யம் அவனிடத்தில் பெருகும். ஆகையால் எம்பெருமானுடைய கருணையின்றி வேறு எவ்விதத்திலும் தங்களுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் மிகுந்த தீனஸ்திதியில் தாங்கள் இருப்பதை வெகு தெளிவாக ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் அறிவிக்கின்றாள் நாயகப்பெண். அதை நேராகச் சொல்வதைக் காட்டிலும் உபமான முகமாகச் சொல்வது மனத்தில் நன்றாகப் படுவதற்கு ஹேதுவாகுமென்று எண்ணி அப்படியே சொல்லுகிறாள்.

மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியுமாபோலே
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து.

என்று. 'நாங்கள் உன் அடிபணிந்து அதாவது திருவடியைத் தொழுது, போற்றி, ஜய விஜயீபவ என்று மங்களாசாஸநம் பண்ணி, புகழ்ந்து ஸத்ய ஜ்ஞாநாநந்த ஸ்வரூபன், ஸர்வலோக நாதன், ச்ரிய: பதி, பரம காருணிகன், வாத்ஸல்ய நிதி, அடியார்களை ரக்ஷிப்பதற்காக அவதரிக்கும் அரவிந்தலோசனன் என்றிப்படிக் கல்யாண குணங்களைப் பாடி வந்திருக்கின்றோம். எப்படிப் போலே யெனில்; உன்னுடைய சத்ருக்களான ஹிரண்யகசிபு ராவணாதிகள் கால க்ரமத்தில் உன்னுடைய பல பராக்ரமங்களை உள்ளபடி அறிந்து "இந்த்ரன் முதலிய தேவர்களையெல்லாம் வென்று மூன்று உலகங்களையும் நம் வசமாக்கிக் கொள்ளும்படி நமக்கிருக்கும் புஜபலம் முற்றிலும் வீண். எம்பெருமானுடைய பலத்தைக் கண்டால் ஒரு கொசுவுக்கும் நமக்கும் யாதொரு விசேஷமுமில்லை" என்ற விவேகம் பிறந்து, 'உலகத்தில் நமக்கு நிகர் யாருமில்லை, நாமே பலிஷ்டர், நாம் எதையும் செய்யக்கூடும், நம்மை வெல்லக் கூடியவர் எவருமில்லை, என்றஹங்காரப்பட்டு அநியாயமாய் ஸர்வலோகேச்வரனைப் பகைத்துக்கொண்டு கெட்டுப்போய் விட்டோமே" என்று மிக வருந்தி அகங்காரமெல்லாம் கழிந்து "நடந்தது நடந்துவிட்டது. இனிப்பகவானிடம் சென்று சரணாகதிபண்ணி அவனுடைய தயையைப் பெற்றாலன்றி நாம் பிழைப்பதற்கு வழியே கிடையாது" என்று தெளிந்து "அளவில்லா ஆநந்த ஸ்வரூபனான நம் நாதனுடைய திவ்ய கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகாமலும் ஸ்வரூபப்ராப்தமான அவனுடைய ஸாம்ராஜ்யத்தைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமலும் அநாதி காலம் தொடங்கி இதுவரையிலும் வீணே திரிந்தோமே" என்று நிர்வேதப்பட்டு, "இனி இப்படி ஸ்வரூபத்தை நாசமாக்காமல் அவனை அடைந்து உஜ்ஜீவிக்க வேண்டும்" என்று நிச்சயித்து, இவ்விதமாக உன் ஸ்மரணம் மேல் மேலும் உண்டாகத் தந்மயராகி "இனி அவனை ஸேவித்தல்லது தரிக்க முடியாது" என்கிற நிலை ஏற்பட்டு விரைந்து ஓடிவந்து உன் திருமாளிகையின் வாசற்படியில் விழுந்து "நாதனே சரணம் சரணம்" என்று கதறி, அவர்களுடைய தீன ஸ்வரத்தைக் கேட்டு நீ வெளியே எழுந்தருளி கடாக்ஷிக்க உடனே அவர்கள் உன் திருவடிகளைப் பற்றிக் கொண்டு

'நமோ நமஸ் தேऽஸ்து ஸஹஸ்ரக்ருத்வ:
புநச்ச பூயோऽபி நமோ நமஸ்தே'
'புகலில்லா அடியேன் உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'

என்று பணிந்தால் எப்படியோ அப்படிப் போலே" என்றாள். இவர்கள் அபலைகள். அதிலும் குழந்தைகள். இவர்கள் தங்களுடைய உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குரிய சக்தியற்றவர்கள் என்றால் இதில் யாருக்கும் எவ்வித விசேஷமும் தோன்றாது. ஆனால் சரணாகதி பண்ணும்போது உத்தேசித்த பலனைப் பெறுவதற்காக விதிக்கப்பட்ட பக்தி முதலிய உபாயத்தை அநுஷ்டிக்கத் தங்களுக்கு வெகு ஸ்வல்பமான சக்தியும் இல்லையென்பதை உள்ளவாறு நன்றாக உணர்ந்து அதனாலுண்டான கார்பண்யத்தை எம்பெருமானுடைய முன்னிலையில் செவ்வையாக வெளிப்படுத்தவேண்டும். அதற்காக இந்த நாயகப்பெண் கீழ்க்கூறியபடி உபமான மூலமாக அதை வெளியிட்டாள். மதுகைடபன் ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு ராவணனென்கிற சத்ருக்களெல்லாம் மூவுலகங்களையும் ஆட்டிவைத்த மஹா பலிஷ்டர்கள். ஆனால் அவர்கள் வலி தொலைந்து ஆற்றாது எம்பெருமானுடைய வாசற்கண் வந்தடிபணிந்தார்கள் என்று எங்கும் கூறப்படவில்லை. (தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள்

"மம மாயா துரத்யயா"

'மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே' என்றது கீதாஸ்ம்ருதி. பகவத் ஸங்கல்பத்தை யாரும் மீற முடியாது. அந்த பகவானையே ஶரணமடைந்தவர்கள் தான் அவன் மாயையைக் கடக்க முடியும் என்று இதன் கருத்து.

ஸ்ரீ பாகவதம் தசமஸ்கந்தம் 7-வது அத்யாயம்.- யசோதை ஒரு ஸமயம் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு ஸ்தன்யம் கொடுத்துக்கொண்டே குழந்தையின் திருமுகமண்டலத்தின் அழகிலீடுபட்டவளாய் கவனித்துக்கொண்டிருந்தாள். அப்போது ஸ்ரீ க்ருஷ்ணன் பால் குடித்துவிட்டு வாயைத் திறந்து கொட்டாவி விட்டார். அந்த ஸமயம் அவரது வாயில் ஆகாயம், சுக்கிரன், அங்காரகன், ப்ருஹஸ்பதி முதலான பெரும் ஒளிகள், திக்குகள், ஸூர்யன், சந்த்ரன், அக்நி வாயு, ஸமுத்ரம், தீவுகள், மலைகள், நதிகள், காடுகள், பஞ்சபூதங்கள், சராசரவஸ்துக்கள் இவைகளைக் கண்டாள். கண்டதும் நடுங்கிப் போய் தன் கண்களை மூடிக்கொண்டு ஆச்சர்யப்பட்டாள். இவ்வாறே மற்றுமொரு ஸமயம் 'ஸ்ரீ க்ருஷ்ணன் மண்ணைச் சாப்பிட்டான்' என்று பலராமன் யசோதையிடம்வந்து கோட் சொல்லிக்கொடுக்க, தாய் குழந்தையை அழைத்து கையில் பிடித்துக்கொண்டு பயமுறுத்தி 'அடங்காப்பயலே! நீ தனிமையில் மண்ணைத் தின்றாயாமே? உன்னைச் சேர்ந்த பிள்ளைகளும் சொல்லுகிறார்கள்; உன் அண்ணனும் சொல்லுகிறான்' என்றாள். அதற்கு க்ருஷ்ணன், 'அம்மா! நான் மண்ணைத் தின்னவேயில்லை. எல்லோரும் பொய் சொல்லுகிறார்கள். அண்ணாவும் பொய்தான் சொல்லுகிறார்; வேண்டுமானால் வாயைத் திறந்து நீயே பார்' என்றதும், யசோதை 'காட்டு' என்று கூற, க்ருஷ்ணன் வாயைத் திறந்து காட்டினார். அப்போதும் யசோதை முன்போலவே அவர் வாயில் ஸகலமான பொருள்களையும் கண்டதுடன் திறந்த வாயில் கோகுலத்தையும், அதில் குழந்தையுடன் தன்னையும் கண்டு திடுக்கிட்டாள். பின் இது என்ன கனவோ! நான் தூங்கவில்லையே! இது ஸ்வப்னமாகாது; இது தேவமாயையா! இவை தைவத்தின் ஆச்சர்யசக்தியால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவையா! அப்படியும் இல்லை. அப்படியாகில் இவற்றை எல்லோரும் காணலாகுமே! அல்லது என்னுடைய புத்தி மாறுட்டத்தால் இப்படித் தோன்றுகின்றதா? நல்லது; அப்படித்தானிருக்கவேண்டும். வேறு விதமாயிருப்பதற்கில்லை, என்று யோசித்து இப்படி மனோவாக்கர்மங்களால் இத்தகையதென்று தீர்மானிக்க முடியாமலிருப்பதால், அந்த மனோவாக்கர்மங்களால் இப்படிப்பட்டவனென்று அறியமுடியாத ஸர்வேச்வரனால் உண்டாக்கப்பட்டவைதானிவை. ஏனெனில் காரணம் அத்தகையது, என்று யோசித்து அப்படிப்பட்ட ஸர்வேச்வரனையே ஶரணமடைகின்றேன். 'இந்த கோகுலத்திற்கும் இந்த ஐச்வர்யத்திற்கும் நான் ஈச்வரி. நந்தகோபர் என் பர்த்தா. இது என் குழந்தை. ஊரிலிருக்கும் கோபர்களும் கோபிகளும் பசுக்கூட்டங்களும் என்னுடையவை. இந் நந்தருடைய ஸகல ஐச்வர்யமும் எனக்கே ஏற்பட்டவை. நான் எல்லாவற்றிற்கும் தலைவி என்ற எண்ணம் எந்த பகவானுடைய மாயையால் ஏற்பட்டதோ, அப்படிப்பட்ட பகவானையே இந்த மாயை நீங்கும்பொருட்டு ஶரணமடைகின்றேன்' என்று ஶரணமடைந்தாள்.

இவ்வாறு கோபீ குழந்தையின் உண்மையை உள்ளபடி அறியும் ஸமயம் பார்த்து ஸர்வேச்வரன் இவளிடம் எவ்வளவோ இரக்கங்கொண்டிருந்தும் முற்றிலும் இவள் மாயாநிவ்ருத்திக்கு இது ஸமயமல்லவென்று பார்த்து, உடனே அவளுடைய அந்த அறிவை மாற்றி புத்ரஸ்நேகமே விஞ்சியிருக்கும்படியாகத் தன்மாயையைப் பறப்பி விட்டார். உடனே அவளும் அந்த

எண்ணங்கள் முற்றிலும் நீங்கப்பெற்று எப்போதும்போல் குழந்தையை லாளனம் செய்ய வாரம்பித்தாள். ஸர்வலோகாதிபதியான ஈச்வரனைத் தன் குழந்தையென்றெண்ணினுள்.

எவ்வளவு அறிவாளிகளாயினும் அல்பாஸ்திரமான வஸ்துக்களில் 'தான்' என்றும், 'தன்னுடையவை' என்ற எண்ணத்தையும் விட முடிவதில்லை. விசேஷ புத்திமான்களுக்கு ஶாஸ்த்ரஜ்ஞாநத்தாலும், பகவதநுக்ரஹத்தாலும், பெரியோர்களுடைய சேர்க்கையாலும் இம்மாயை சில ஸமயம் நீங்கலாம். இருந்தும் முற்றிலும் நீங்காது. நிரந்தரகைங்கர்யம் பண்ணுவதற்கு வேண்டிய ஸர்வபாபக்ஷயம் பிறக்கும்போதுதான் முற்றிலும் நீங்கும். அதுவும் 'பக்தி ப்ரபத்திகளில் இரண்டிலொரு உபாயத்தால் தான் நீங்கும்' என்ற விஷயம் இக்கதையால் விஶதமாக்கப்பட்டது. ஆகவே இக்கதை 'மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே' என்ற கீதா ச்லோகத்தின் விளக்கமாகிறது.

யாருடைய மாயை பெரியது?

இவ்வாறே ப்ரஹ்மா ஒரு ஸமயம் ஸ்ரீ க்ருஷ்ணனின் மாயையைக்கண்டு (ஆச்சரியசக்தியை) அதில் ஈடுபட்டு ஆச்சர்யப்பட்டவராய் அவன் மாயை பெரிதா, தன்மாயை பெரிதாவென்று பரீக்ஷித்துப்பார்த்து தன்மாயையால் தானே ஏமாந்து திண்டாடி, மறுபடி ஸ்ரீ க்ருஷ்ணனையே ஶரணமடைந்து துதித்து மாயை நீங்கப்பெற்று தன் பதவியைத் தான் மீண்டும் பெற்ருர். ஸ்ரீ பாகவதம் 10 வது ஸ்கந்தம் 12, 13, 14 அத்யாயங்கள் இந்த விஷயத்தை விளக்குகின்றன. அதாவது:- ஒரு ஸமயம் ஸ்ரீ கண்ணன் தன்னேடொத்த பிள்ளைகளுடன் கன்றுக்குட்டிகளை ஓட்டிக்கொண்டு காட்டிலேயே போய் போஜனம் செய்வதாகத் தீர்மானித்து ஆஹாரத்தையும் கையிலேயே எடுத்துக்கொண்டு அதிகாலையிலேயே புறப்பட்டு ப்ருந்தாவனத்தில் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். பிள்ளைகளும் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள். கன்றுக்குட்டிகளும் அப்படியே இருக்கும். ஒவ்வொரு பிள்ளையும் தங்களுக்குப் பிடித்தமான வகையில் தாய்மார்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தபோதிலும் தாங்களாக தங்களை காய், பூ, தளிர், மயில்தோகை முதலியவைகளால் அலங்கரித்துக்கொண்டு பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் பருவத்திற்கேற்ற விளையாட்டுகளில் ஈடுபட்டு ஒருவருக்கொருவரை பரிஹாஸம் செய்வதும், க்ருஷ்ணன் தூரத்திலிருக்கும்போது போட்டியிட்டுக்கொண்டு அவரை ஓடித்தொடுவதும், சிலர் குழலூதுவதும், சிலர் கொம்பு ஊதுவதும், வண்டுகள் பாடுவதைக் கேட்டு அவற்றைப்போல் தாங்கள் பாடுவதும், குயில்களை அநுஸரித்துப் பாடுவதும், ஹம்ஸங்கள் போலும் கொக்குகள் போலும் தாங்கள் நடப்பதும்: இம்மாதிரி க்ருஷ்ணனுடன் சேர்ந்து அவரிட்ட வேலையைச் செய்துகொண்டும் ப்ரஹ்மாநந்தத்தை அநுபவித்துக்கொண்டு விளையாடி வந்தார்கள்.

இப்படி ஸாதுக்கள் ஸுகாநுபவம் செய்துகளிப்பதைக் கண்கண்டு ஸஹியாத அகாஸுரனென்பவன் கம்ஸனல் அனுப்பப்பட்டு அவர்கள் எல்லோரையுமே ஒரேஸமயத்தில் விழுங்கிவிடவேண்டுமென வெண்ணி ஒரு பெரிய மலையோடொத்த மலைப்பாம்பின் உருவம் தரித்து வாயைத் திறந்துகொண்டு அவர்கள் வரும் வழியில் காத்திருந்தான். பிள்ளைகளும் இதைக் கண்டதும் 'என்னே! இதுவும் ப்ருந்தாவனத்தின் ஒரு அழகோ! மலைப்பாம்புபோல் காணப்படுகின்றதே! இந்த அழகை நாம் இதுவரை காணவில்லையே' என்று சிலரும், 'இது மலைப்பாம்புதான்; அதற்கு வேண்டிய எல்லாவடையாளங்களும் காணப்படுகின்றன' என்று சிலரும், 'இல்லை; இது மலைப்பாம்புபோல் காணப்படும் ஒரு குஹைதான். உள்ளே நுழைந்து பார்க்கலாம்' என்று சிலருமாகப் பேசிக்கொண்டு வேகமாகப்பிள்ளைகளும் கன்றுக்குட்டிகளுமாக உள்ளே நுழைந்துவிட்டார்கள். மலைப்பாம்பும் ஸ்ரீ க்ருஷ்ணனின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு அசையாமலிருந்தது. எல்லோருக்கும் அபயத்தைத் தரும் க்ருஷ்ணனும் தன்னைச் சேர்ந்த ஸாதுக்கள் இப்படி தன்னிடமிருந்து தப்பிப்போய் பாம்பின் வயிற்றில் சிக்கிக்கொண்டமையைக் கண்ணுற்ருர். இவர்

களையும் காப்பாற்ற வேண்டும்; அஸுரனையும் ஒழிக்கவேண்டும்; இரண்டும் ஒரே காலத்தில் நடைபெறுவது எப்படி என்று பார்த்து, தான் அவன் தொண்டையளவும் புகுந்து நின்று ஒரு நொடியில் த்ரிவிக்ரமன் போல் உயர்ந்து விட்டார். அகாஸுரனுக்கு உள்காற்று வெளிவ்ராமலும் வெளிக்காற்று உட்செல்லாமலும் தொண்டை அடைபட்டு அவன் ப்ராணன் அவன் தலையைப் பிளந்துகொண்டு வெளிக்கிளம்பி விட்டது. அந்த ப்ராணவாயுவின் வேகத்தால் நுந்தப்பட்டு உள்ளிருக்கும் கன்றுகளும் பிள்ளைகளும் வெளியே தள்ளப்பட்டார்கள். வெளிவந்தவர்களை ஸ்ரீ க்ருஷ்ணன் தன் கடாக்ஷத்தால் குளிரச் செய்துகொண்டு அவர்களுடன் தானும் கலந்துகொண்டு வெளிக்கிளம்பிவிட்டார். ஆகாயத்திலிருந்த தேவர் முதலியவர்கள் முதலில் நடுங்கிய போதிலும் பின் ஸந்தோஷித்து ஆச்சர்யப்பட்டு க்ருஷ்ணன் பெருமையைப் பலவாறாகப் புகழ்ந்தார்கள். அப் புகழைச் செவியுற்ற ப்ரஹ்மாவும் தன்னிருப்பிடத்திலிருந்து ப்ருந்தாவனம் வந்து க்ருஷ்ணன் பெருமையைக் கண்டு ஆச்சர்யப்பட்டு இவ்வளவு தானோ இவர் பெருமை இன்னமும் இருக்கிறதோ காண வேண்டும் என நினைத்தார்.

அப்போது ஸ்ரீ க்ருஷ்ணன் பிள்ளைகளைப் பார்த்து 'நேரமாய் விட்டது; கன்றுக்குட்டிகளுக்குத் தண்ணீர் காட்டிவிட்டுப் புல்தரையில் மடக்கி மேயும்படி செய்துவிட்டு நாமெல்லோரும் சாப்பிடுவோ'மென்றார். எல்லோரும் யமுனையின் மணலில் ஜலத்திற்கு ஸமீபத்தில் க்ருஷ்ணனை நடுவில் உட்கார வைத்து அவரைச் சுற்றி பிள்ளைகள் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள். எல்லோரும் தங்கள் தங்களது சாதத்தின் ருசியையும் பெருமையையும் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இதரர்களைச் சிரிக்கச்செய்துகொண்டும் சாப்பிடும்போது க்ருஷ்ணனும் இடது கையில் சாதத்தை அவிழ்த்து வைத்துக்கொண்டும் விரல்களின் சந்துகளில்காய்த்துண்டுகளை(வ்யஞ்ஜனங்களை) இடுக்கிக்கொண்டும் சாப்பிட ஆரம்பித்தார். அப்போது பக்கத்தில் மேய்ந்துகொண்டிருந்த கன்றுகள் அங்கிருந்து அகன்றுபோய் விட்டனவென்று ஒரு பையன் எழுந்துபார்த்துச் சொன்னான். உடனே க்ருஷ்ணன் 'நான் போய் அவற்றை ஓட்டி வருகிறேன்; நீங்கள் சாப்பிட்டுக்கொண்டே யிருங்கள்; நிறுத்த வேண்டாம்' என்று சொல்லிக் கன்றுகளைத் தேடச்சென்றார். இந்த நல்ல தருணத்தை எதிர்பார்த்திருந்த ப்ரஹ்மதேவனும் தன்னுடைய மாயையால் கன்றுகளை எங்கேயோ மறைத்து வைத்துவிட்டு மீண்டும் யமுனைக் கரைக்கு வந்து க்ருஷ்ணன் அங்கிருந்து அகன்றதும் அங்கிருந்த பிள்ளைகளையும் வேறிடத்தில் ஒளித்து வைத்து விட்டார்.

க்ருஷ்ணன் காடெங்கும் தேடியலைந்து கன்றுகளைக் காணாமல் கையில் சாதத்துடனும் வாயில் பாதி கவளத்துடனும் யமுனைக் கரையில் வந்து பார்க்க, பிள்ளைகளையும் காணாதவராய் அவர்களையும் இங்குமங்கும் தேடியலைந்து எங்கும் காணாமல், கடைசியில் இது ப்ரஹ்மதேவனின் கூற்று எனத் தெரிந்து கொண்டார். பின் ஸாயங்காலம் தாம் மட்டும் ஊருக்குத் திரும்பிப்போனால் எல்லோருக்கும் என்ன பதில் சொல்வது என்று யோசித்துப் பிள்ளைகளின் தாய்மார்களைக் களிப்பிக்கத் தானே அவ்வளவு பிள்ளைகளாகவும் அவ்வளவு கன்றுகளாகவும் உருவம் தரித்துக்கொண்டார். அவற்றில் அந்த பிள்ளைகளின் உயரம் வர்ணம் வஸ்த்ரம் பழக்கவழக்கங்கள் கைகால்களின் நீளம் பருமன் ஆபரணம் அலங்காரம் கோல் குழல் முதலியவை எப்படிப்பட்டவையோ அவ்விதமாகவும், அவ்வாறே கன்றுகளின் விஷயத்திலும் ஸர்வமும் முன்போலிருக்கும்படியும், உருவங்களுடன் ஸர்வமும் க்ருஷ்ணமயமாகிவிட்டது. இவ்வாறு தன்னையே பிள்ளைகளாகவும் கன்றுகளாகவும் செய்துகொண்டு அவைகளைத் தானே மேய்த்துக்கொண்டும் அவர்களுடன் விளையாடிக்கொண்டே ஸாயங்காலம் கோகுலத்தில் ப்ரவேசித்து அந்தந்த பிள்ளைகள் அவரவர்களின் வீடுகளில் நுழையும்படியும், கன்றுகளும் அவற்றின் இடங்களுக்குப் போய்ச் சேரும்படியும் அவ்வோ தாய்ப்பசுக்களிடம் தாங்களே போய் ஊட்டும்படியும் செய்தார். (தொடரும்)

ஸ்ரீ:

கதையும் காரணமும்

உலகில் சிலர் முன்னுக்குப்பின் முரண்படச் செய்வதும், சொல்லுவதும் உண்டு. 'நான் உயிர் உள்ளவளவும் வாய்திறந்து பேசுபவனல்லன்' என்று வாய் திறந்து பேசுகிறவன் முரண்படச் செய்பவனாகிறான். இங்கு அவன் சொல்லுக்கும் செய்கைக்கும் விரோதம் வருகிறது. 'எந்தன் தாய்க்கு மைந்தன் இல்லை' என்றவன் முரண்பட மொழிந்தவனாவான். 'எந்தன் தாய்' என்றதால் 'அவளுக்கு மைந்தன் நானே' என்று பொருள்படச் சொல்லி, பின்னே 'மைந்தன் இல்லை' என்று சொல்லுதல் முன் சொன்னதுடன் முரண்பட்டதாகிறது. இவ்விதமே 'உலககார்யங்களுக்குக் காரணம் என்ன' வென்று நாம் இங்கு விசாரிக்கப் புகும்போது 'கார்யங்கள் அகஸ்மாத்தாய் நடைபெறுகின்றன' என்று நாஸ்திகர்கள் சொல்லும் பதிலும் முன் பின் முரண்பாடுடையதே. அவர்கள் சொல்லுகிறார்கள்:– 'முள்ளின் முனையில் கூர்மைக்கும், தண்ணீரில் தண்மைக்கும் காரணம் காட்டப்போமோ? அவ்விதமே உலகில் மற்ற கார்யங்களும் காரணாபேக்ஷையின்றிக்கே உண்டாகின்றன' என்று. நாம் இதை சிறிது ஆலோசித்துப்பார்த்தால் இதிலுள்ள முரண்பாடு விளங்கும். உண்டாதல் என்பது ஒரு காரணத்திலிருந்து கார்யம் பிறத்தலையே குறிக்குமாதலால் 'காரணமின்றி' 'உண்டாதல்' என்னும் இவ்விரு சொற்களும் ஒருங்கே சேருவது எங்ஙனே? இனி இந்த 'அகஸ்மாத்' என்ற சொல்லுக்கு 'ஸ்வபாவம்– இயற்கை' என்னும் பொருள்கொண்டு தண்ணீருக்கு குளிர்ச்சி முதலிய குணங்கள்போல் எல்லா கார்யங்களும் ஸ்வபாவத்தினால் – இயற்கையினால் உண்டாகின்றன' என்று இதற்குச் சிலர் வ்யாக்யானம் கூறுகின்றனர். அப்படியாகில் இவர்கள் சொல்லும் 'இயற்கை' என்னும் காரணம் வேதாந்திகள் ஒப்புக்கொண்ட உலககாரணத்தையே குறிக்குமாதலால், அவர்களுடன் வைதிகர்களாகிய நமக்கு அதிக விவாதம் வேண்டியதில்லை. இதனால் 'ஸர்வதேச சட்டங்கள்' என்று சில (வை) இருப்பன போல, 'காரணமின்றிக் கார்யம் பிறவாது' என்ற ந்யாயமும் ஸர்வ மதத்தவராலும் மீற முடியாததாகும் என்று தேறிநிற்கிறது.

இனி உலகுக்கு யாது காரணம் என்னும் விசாரத்தை எடுத்துக்கொள்ளுவோம். ப்ருதிவீ முதலிய பூதங்களின் அணுக்கூட்டங்களே உலகை உண்டாக்குகின்றன என்று அக்காலம் முதல் சிலர் கூறிவருவது நமக்குத் தெரிந்ததே. இதன் உண்மையைச் சிறிது ஆராய்வோம். ஆனால் அதை ஆராயும் முன் 'காரணம்' என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? என்பதைப் பற்றியும் நாம் இங்கு தெரிந்துக்கொள்ள வேண்டியதாகிறது. 'காரணம்' என்றால் கார்யம் உண்டாகும் இடந்தோறும் அதற்கு முன்னேரத்தில் தேவைப்படுகிறதான ஒரு வஸ்து என்று பொருள் ஆகும். குடத்திற்கு குயவன் மண் முதலியன காரணம். இன்னொரு விஷயமும் நாம் இங்கு கவனிக்க வேண்டியதுண்டு. காரியம் உண்டாகுமிடங்களில் ஒரு பொருள் மற்றொன்றாக மாறுவதும், வேறு சில பொருள்கள் தாங்கள் காரியமாக மாறாமல் அம்மாறுதலுக்கு உதவிபுரிவதும் காணப்படுகிறது. மண் குடமாக மாறுகிறது. குயவன், அவன் சுற்றும் சக்கரம், இவைகள் தாங்கள் குடமாக மாறாமலே இருந்து அம்மாறுதலுக்கு உதவுகின்றன. ஆக, குடத்திற்கு மண், குயவன், முதலியன 'காரணம்' என்று பொதுப்படகூறப்பட்டாலும்; மண் காரணமாகும் வகைக்கும் குயவன் காரணமாகும் வகைக்கும் வ்யத்யாஸம் உண்டு. இங்கு மண்ணை 'உருமாறும் காரணம்' (உபாதாநகாரணம்) என்றும், குயவன் முதலியவைகளை 'உதவும் காரணம்' (நிமித்தகாரணம்) என்றும் நாம் கூறலாம்.

பிறகு அணுக்கூட்டங்களே உலககாரணங்கள் என்ற வாதத்தைத் தொடருவோம். மேற்சொன்ன இரண்டு வகையில் அணுக்கள் உபாதாநகாரணம் (உருமாறும் காரணம்) என்ற வகையில்தான் அடைக்கத் தக்கதுகள். ஈச்வ

ரன் ஸங்கல்பமூலமாய் உதவ, அணுக்கள் உலகை உண்டுபண்ணுகின்றன என்பதே அவர்கள் மதம். ஆக உலகமாகிய கார்யத்துக்கு அணுக்கள் உபாதாநகாரணமாகக் கூடியதுகள்தானா? என்பதே இங்கு நம்முன் நிற்கும் கேள்வி. இதற்குப் பிறகு பதில் கூறுவோம். முதலில் ஒரு உதாஹரணத்தைக்கவனிப்போம். 'காவேரி நதி மேட்டூரிலிருந்து பெருகி வருகியது' என்று ஒருவன் கூறினால், அக்கூற்றை அறவே நாம் மறுக்கிறோமா? அல்லது முற்றிலும் உண்மை என்றுதான் ஒத்துக்கொள்ளுகிறோமா? இரண்டுமில்லை. அவ்வார்த்தையைத் திருத்திப் பொருள்கொள்ளுகிறோம். அந்நதி மேட்டூரிலிருந்தும் புறப்பட்டு வருவது உண்மையே. ஆயினும் மேட்டூருக்கும் அப்பால் அந்நதிக்குமூலமாய்குடகுமலைகள் இருக்க 'குடகிலிருந்து காவேரி பெருகிவருகிறது' என்று சொல்லுவதே ஸரியானதாகும். 'மேட்டூரிலிருந்து' என்பது அறைகுறைப்பேச்சே, என்றல்லவோ அவனைத் திருத்தவேணும். அதே நீதிதான் இங்கும். உலகத்துக்கு அணுக்களும் காரணமே; ஆனால் அவைகளே காரணமல்ல. அவைகளுக்கும் அப்பால் அவைகளுக்கும் காரணமாய் மூலப்ரக்ருதி என்னும் தத்வம் ஒன்று உள்ளது. ஆக அதுவே அசேதநஉலகுக்கு உபாதாநகாரணம் என்றும் ஈச்வரன் நிமித்தகாரணம் என்றும் சொல்வதுதான் முன்னதைவிட ஸரியானது. ஆகையால்தான் சிலமதத்தவர்கள் இதையே தங்கள் ஸித்தாந்தமாகக் கொண்டும் இருக்கின்றனர்.

ஆனால் வேதாந்திகளின் ஸித்தாந்தம் இதனிலும் கொஞ்சம் வேறுபட்டது. ஈச்வரனே உலகுக்கு உபாதாநகாரணம் என்று அவர்கள் சொல்லுவர். நிமித்தகாரணம் ஈச்வரன் என்பது எல்லோருக்கும்போல் இவர்களுக்கும் உடன்பாடே. ஆக ஈச்வரனே இரண்டுமுறைகளால் இரண்டுவித காரணமும் ஆகிறான் என்பர். இதுவே சிறந்த ஸித்தாந்தம் என்பதைச் சிறிது விளக்குவோம். உலகில் நமக்கு ஒரு சரீரம் பரதந்த்ரமாய், சொன்னவாறெல்லாம் கேட்டு நடக்கக் கூடியதாய் இருப்பதுபோல் ஈச்வரனுக்கும் மூலப்ரக்ருதியும் மற்றுமுள்ள த்ரவ்யங்களும் பரதந்த்ரங்களாய் சரீரங்களாய் அமைந்திருக்கின்றன என்பது ஸகல ச்ருதி ஸ்ம்ருதிப்ரஸித்தம். நமது சரீரம் நாம்செய்த கர்மாவின் விளைவு. ஈச்வரனுடையது அத்தகையதன்று என்பதே இரண்டுக்கும் உள்ள வாசி. மற்றபடி மேல் சொல்லப்போகும் ஸ்வபாவம் இரண்டுக்கும் பொது. நமது சரீரத்துள் நமது ஆத்மா இருக்கும் வரையில்தான் அதற்கு 'சரீரம்' என்னும் பெயரும், தலைகால் முதலியவைகளுடன் கூடிய அதன் உருவமும் நிலைத்திருப்பது. பிறகோ பெயரும் மாறிவிடுகிறது; உருவமும் அழியத் துடங்குகிறது. அவ்வாறே மூலப்ரக்ருதிக்கும் ஈச்வரன் அந்தராத்மாவாய் இருப்பதாலேயே 'ப்ரக்ருதி' என்னும் பெயரும், அதற்குரிய உருவமும் ஏற்பட்டிருக்கிறது. அவன் அவ்வாறு இல்லையாகில் இதுவும் இல்லையாம். ஆக இவ்வளவு பரதந்த்ரமான சரீரம் செய்யும் கார்யங்களை, அதன் ஆத்மா செய்ததாக ஏறிட்டுச் சொல்லுவதே உலகவழக்கமாகவும் ஸரியானதாகவும் இருக்கிறது. ராமனுடைய சரீரமே நடந்தாலும் 'ராமன் நடக்கிறான்' என்றே சொல்லுகிறோம். கண்ணனுடைய பாலப்பருவம் கொண்ட சரீரமே அவனுடைய யௌவனசரீரமாக மாறினாலும் பாலக்ருஷ்ணன் யுவாவாக மாறிவிட்டான் என்றே உலகில் வ்யவஹரிக்கப்படுகிறது. இந்த நியதிப்படி பார்த்தால் மூலப்ரக்ருதியே உருமாறி அசேதனப்ரபஞ்சத்துக்கு உபாதாநகாரணமாயினும், அதனுடைய அத்தன்மையை, அதன் அந்தராத்மாவான ஈச்வரன்பக்கலில் ஏறிட்டு 'ப்ரக்ருதியை சரீரமாகக்கொண்ட பரமாத்மாதான் ப்ரபஞ்சத்துக்கு உபாதாநகாரணம்' என்று சொல்லுவதே சாலப்பொருத்தமானதாகும். 'ஈச்வரன் ப்ரபஞ்சமாக மாறி நிற்கிறான்' எனினும், மாறுதல் அனைத்தும் அவன் சரீரமான மூலப்ரக்ருதியையே சாரும். ஈச்வரனுக்கு எப்பொழுதும் யாதொரு மாறுதலும் இப்படிச் சொன்னதினால் ஏற்பட்டுவிடாது. பாலக்ருஷ்ணன் யுவாவாகிறானென்ற உதாஹரணத்திலும் யௌவனமாறுதல் சரீரத்துடன் நின்று விடுகிறதேயன்றி ஆத்மாவில் தட்டவில்லையென்பது ப்ரஸித்தம்.

(தொடரும்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நாமக்கல்லில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்காரின் ப்ரார்த்தனைக்கிணங்கி 7-12-54 ராத்ரி அவருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். 8-12-54 ல் அவர் விசேஷமாக ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணி வைத்தார். அன்று திருமங்கைமன்னன் திருநக்ஷத்ர சாற்றுமுறை விசேஷமாக நடந்தது. ராத்ரி புறப்பட்டு 10 மைலுள்ள வலையப்பட்டிக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகள் 9-12-54 ல் யதாசக்தி ஆராதித்தார்கள். திருப்பாணாழ்வார் சாற்றுமுறையும் நடந்தது. அன்றிரவு புறப்பட்டு 12 மைலுள்ள அரசலூருக்கெழுந்தருளினர். அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின்பேரில் அன்றும் மறு நாளும் அங்கேயே எழுந்தருளியிருந்தார். 10-12-54ல் திருக்கார்த்திகை உத்ஸவம் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி வ்ருஷபலக்னத்திலேயே தீபாரோஹணம், சொக்கப்பனை முதலியவைகள் வழக்கம் போல் நடந்தன. முசிரி வாஸிகளின் ப்ரார்த்தனைப்படி 11-12-54 ராத்ரி 10 மைலிலுள்ள முசிரிக்கெழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் இரண்டு நாட்கள் திருமஞ்சனம் ததீயாராதனை பண்ணி வைத்து ஆராதித்தனர். 13-12-54 ராத்ரி 11 மைலுள்ள குணசிலத்திற்கெழுந்தருளியாயிற்று. 14-12-54 ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 10 மைலிலுள்ள ஸ்ரீரங்கம் தசாவதாரன் ஸந்நிதிக்கு எழுந்தருளினர். 15, 16 தேதிகளில் அங்கேயே எழுந்தருளியிருந்தார். 16-12-54 மத்யாஹ்னம் புறப்பட்டு 16 மைலிலுள்ள அப்பக்குடத்தானுக்கு ராத்ரி 9 மணிக்கெழுந்தருளினர். மறுநாள் ஸ்ரீ ஹரிஹரராவ் ஸ்ரீ மாதவராவ் முதலியவர்கள் விசேஷமாக ஆராதித்தார்கள். கோயில் ட்ரஸ்டி ஸ்ரீ ஹரிஹரராவ் கோயிலில் கொஞ்சமும் சங்கையில்லாமல் திருவுள்ளப்படி எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணவேணுமென்று ப்ரார்த்தித்ததின்பேரில் அப்பக்குடத்தானை மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. ஸ்ரீ அழகியசிங்கர் பெருமாளுக்குப் பட்டாடை சாற்றியும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை சிஷ்யகோடிகளுடன் அநுஸந்தித்தும் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. அன்று பகல் 2 மணிக்குப் புறப்பட்டு 9 மைலுள்ள கோனேரிராஜபுரத்திற்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் 18-12-54 அன்று ஆராதித்து டோலோத்ஸவமும்பண்ணி வைத்தார்கள். அன்றைய தினம் 40-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ரங்கநாதசடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ரமஹோத்ஸவத்திற்காக வேதப்ரபந்த க்ரந்தபாராயணங்கள் துடங்கப்பட்டன. கல்யாணபுரவாஸிகளான ஈச்சம்பாடி, ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ க்ருஷ்ணமாசாரி முதலியவர்கள், கல்யாணபுரத்திற்கெழுந்தருளவேணுமென்றும், அங்கேயே இத் திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தை நடத்தவேணுமென்றும், தண்டம் ஸமர்ப்பித்து ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் திருவுள்ளம்பற்றி ராத்ரி 9 மணிக்குப் புறப்பட்டு 8 மைலிலுள்ள கல்யாணபுரத்திற்கெழுந்தருளியாயிற்று. 19-12-54 முதல் 22-12-54 வரையில் அவ்வூரில் எழுந்தருளியிருந்தார். 20-12-54 அன்று திருநக்ஷத்ரம் மிக விமரிசையாக நடந்தது. மதுரை, திருக்குடந்தை காரைக்குடி முதலியவிடங்களிலிருந்தும் சுற்றுப்புற அக்ரஹாரங்களிலிருந்தும் சிஷ்யகோடிகள் வந்திருந்தார்கள். பாராயணிகளில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸ்ரீ அழகியசிங்கரால் ஸம்பாவனை செய்யப்பட்டது. அப்பக்குடத்தானைப் போலவே திருக்கண்டியூரிலும் மங்களாசாஸனம் செய்ய வேணுமென்று கோயிலதிகாரிகள் ப்ரார்த்தித்தபடி 22-11-54 மத்யாஹ்னம் திருக்கண்டியூருக்கெழுந்தருளி பெருமாளுக்குப் பட்டாடை ஸமர்ப்பித்து மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. திரும்புகாலில் கல்யாணபுரம் கோயிலுக்கெழுந்தருளினர். அன்று ராத்ரி ஈச்சம்பாடி, ஸ்ரீ க்ருஷ்ணமாசாரியர் டோலோத்ஸ

ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரத்தில் எழுந்தருளியபோது

எடுத்த படங்கள்



ஸ்ரீ அழகியசிங்கர்
சேலத்திற்கு
எழுந்தருளியபோது
எடுத்த படம்

முக்கிய அறிவிப்பு

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்ப வேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்**, மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்றாகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ்கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

வம் பண்ணிவைத்தார். கல்யாணபுரத்திலிருந்து எழுந்தருளும்போது ஸ்ரீ சாரங்கபாணி அய்யங்கார், ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ ராஜகோபாலய்யங்கார் இவர்களின்ப்ரார்த்தனையின்பேரில் பெருமாளைப் பல்லக்குடன் அவரவர் க்ருஹங்களுக்கு எழுந்தருளப் பண்ணியாயிற்று. ஒவ்வொருவரும் தனித்தனியே ஸம்பாவனை செய்து உபஹாரம் ஸமர்ப்பித்தார்கள். 22-12-54 ராத்ரி புறப்பட்டு 2 மைலிலுள்ள தில்லைஸ்தானத்திற்கு எழுந்தருளினர். 23-12-54 ல் அவ்வூரார் ஆராதித்து டோலையும் பண்ணிவைத்தார்கள். அன்றைய தினம் அவ்வூர் கோயிலுக்கும் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கும் எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி... தில்லைஸ்தானம் ஸ்வாமியும் ஸ்ரீரங்கத்திலிருந்து எழுந்தருளி பெருமாளை ஸேவிக்கும்படியாயிருந்தது. 3 மணிக்குப் புறப்பட்டுக்கோயிலதிகாரிகளின் ப்ரார்த்தனையின்பேரில் 2 மைலுள்ள பெரும்புலியூரென்னும் திருமழிசைப்பிரானால் அபிமானிக்கப்பெற்ற க்ஷேத்ரத்திற் கெழுந்தருளியாயிற்று. ஸ்ரீ தில்லைஸ்தானம் ஸ்வாமியும் கூடவிருந்து அந்த கோயில் விசேஷங்களையும், தாம் செய்த கைங்கர்யங்களையும், தம்முடைய ஆச்ரமத்தையும் காட்டி, ஸ்ரீ அழகியசிங்கருடன் தாம் மறுபடி பெருமாளை ஸேவித்ததில் தமக்குண்டான ஸந்தோஷத்தைத்தெரிவித்தார். ச்ரமத்தைப் பாராமல் அந்த ஸ்வாமி எழுந்தருளினதை ஸ்ரீ அழகியசிங்கரும் பாராட்டியாயிற்று. அங்கிருந்து தஞ்சாவூர் சிஷ்யர்களின் ப்ரார்த்தனையின்படி அன்றிரவு கிளம்பி 7 மைலுள்ள தஞ்சாவூருக்கு எழுந்தருளியாயிற்று. அந் நகரவாஸிகள் 24-12-54 முதல் 26-12-54 வரையில் ஆராதித்தார்கள். 24-12-54 ல் டோலோத்ஸவமும் 25-12-54 ல் திருமஞ்சனமும் பண்ணிவைத்தார்கள். அன்று அவர்களுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி 'வைதிகாசாரத்தின் ஆவச்யகதை' என்பது பற்றி உபந்யஸித்தாயிற்று. ஞாயிற்றுக்கிழமை 41-வது பட்டம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திற்காக வேத ப்ரபந்த க்ரந்தபாராயணங்கள் துடங்கப்பட்டன. பகல் பத்து உத்ஸவமும் துடங்கப்பட்டது. அன்று மத்யாஹ்னம் ஸ்ரீ எம். எஸ். ராஜகோபாலய்யங்கார் ப்ரார்த்தனையின் பேரில் ஸ்ரீநிவாஸபுரத்திலுள்ள அவர் க்ருஹத்திற்கெழுந்தருளினர். ராத்ரி அவர் ஆராதித்தார். அங்குள்ள ஸ்த்ரீகளனைவருமாக டோலோத்ஸவம் பண்ணிவைத்தனர். அன்றையதினம் வெண்ணாற்றங்கரைக் கெழுந்தருளும்போது சிஷ்ய கோடிகளின் ப்ரார்த்தனைப்படி பெருமாளுடன் தந்தப்பல்லக்கில் ஸ்ரீ அழகியசிங்கர் ராஜவீதியில் எழுந்தருளியாயிற்று. சிஷ்யகோடிகள் ஊர்வல உத்ஸவத்தை நன்றாக நடத்திவைத்தார்கள். ஊர்வலமானதும் 2 மைலுள்ள வெண்ணாற்றங்கரைக்கு எழுந்தருளினர். 27-12-54 ல் அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். அங்கு கோயில்கொண்டுள்ள நீலமேக மணிக்குன்ற லக்ஷ்மீந்ருஸிம்ஹனென்னும் எம்பெருமான்களை அப்பக்குடத்தான், திருக்கண்டியூர் போலவே வெண்ணாற்றங்கரை திவ்ய தேசமும் என்று விஜ்ஞாபித்து ப்ரார்த்தித்ததின்பேரில் மங்களாசாஸனம்பண்ணியாயிற்று. அங்கிருந்து ராத்ரி 5 மைலுள்ள திட்டைக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஸ்ரீ குப்புஸாமி அய்யங்கார் 28-12-54 ல் பெருமாளை ஆராதித்தார். அய்யம்பேட்டைசாவடி வாஸிகளின் ப்ரார்த்தனைப்படி அன்றிரவு 7 மைலிலுள்ள அவ்வூருக்கெழுந்தருளினர். 29-12-54 ல் ஸ்ரீ ரங்கநாதய்யங்கார் முதலிய அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். அங்கிருந்து நெடுந்தெரு வாஸிகளின் ப்ரார்த்தனையின் பேரில் 3 மைல் தூரமுள்ள அவ்வூருக்கு அன்றிரவு எழுந்தருளியாயிற்று. வேத வாத்யகோஷங்களுடனும், பாணவேடிக்கைகளுடனும், பூர்ணகும்பத்துடனும் எதிர்கொண்டு எழுந்தருளப்பண்ணி 5 தினங்கள் ஆராதித்தார்கள். வியாழக்கிழமையன்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஆராதித்தார். வெள்ளியன்று ஸ்ரீ வீரராகவாசாரியர் திருமஞ்சனம் பண்ணிவைத்தார். அன்று ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வெகு விமரிசையாக நடந்தது.

மதராஸ், மதுரை, கல்யாணபுரம் முதலியவிடங்களிலிருந்து சிஷ்யகோடிகள் வந்திருந்து ஸ்ரீ பாததீர்த்தம் ஸ்வீகரித்து பலமந்த்ராக்ஷதைகளைப் பெற்றுக்கொண்டார்கள். பாராயணாதி கைங்கர்யத்திலந்வயித்த ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸம்பாவனை செய்யப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை திருப்பதி ஸ்ரீ நரஸிம்ஹ அய்யங்கார் ததியாராதனம் பண்ணிவைத்தார். அன்றிரவு பாபநாசம் ஸ்ரீமான் ஏ. ஸி. ஆர். நாயுடு டோலோத்ஸவம் பண்ணி வைத்தார். திங்கட்கிழமை ஸ்ரீ எஸ். க்ருஷ்ணமாசாரியர் தன் க்ருஹத்திற்கெழுந்தருளப்பண்ணி திருமஞ்சனம், டோலோத்ஸவங்களுடன் ஆராதித்தார். அன்று ராத்ரி 3 மைலிலுள்ள பாபநாசத்திற்கெழுந்தருளினார். அவ்வூர் வாஸிகளனைவரும் சேர்ந்து ஆராதித்தார்கள். 4-1-55 ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 9 மைலிலுள்ள ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்குச் சொந்தமான நரஸிம்ஹபுரத்திற்கெழுந்தருளினார். புள்ளபூதங்குடி ஸ்ரீ வல்வில்லி ராமன் ஸந்நிதியிலிருந்து அரவணை, சத்ரசாமராதிகள், பூர்ணகும்பம் முதலியவைகளுடன் கைங்கர்யபரர்கள் மேலவீதிக்கே வந்து எதிர்கொண்டழைத்து ஸ்ரீ அழகியசிங்கரை நரஸிம்ஹபுரம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் எழுந்தருளப் பண்ணினார்கள். 5-1-55 புதன்கிழமை புள்ளபூதங்குடி ராமன் ஸந்நிதியிலிருந்து அரவணை ப்ரஸாதங்களுடனும் கோயில் மரியாதைகளுடனும் வாத்ய கோஷத்துடனும் முத்ரகர்த்தா முதலியவர்கள் நரஸிம்ஹபுரம் ஸ்ரீ அஹோபிலமடத்துக்கு வந்து மங்களாசாஸனத்திற்கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் மங்களாசாஸனத்திற்கெழுந்தருளினார். ஸந்நிதிவீதியை ஸமீபிக்கும்போது ஸ்ரீசடாரியை எழுந்தருளப்பண்ணி திருப்பரியட்டம், திருமாலை, ஸ்ரீசடாரி முதலிய மரியாதைகளை ஸ்ரீ அழகியசிங்கருக்குப் பண்ணிவைத்து சத்ரசாமராதி ஸகலமர்யாதைகளுடனும் கோயிலுக்கெழுந்தருளப் பண்ணினார்கள். வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ராமன் அப்போது கருடவாஹனாரூடராயெழுந்தருளியிருந்தார். ஸ்ரீ அழகியசிங்கர் பெருமாளை அந்நிலையிலேயே மங்களாசாஸனம் பண்ணவும், பெருமாள் திருவீதி புறப்பாடு நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் வேதப்ரபந்தங்கள் துடக்கம் செய்து பெருமாளுடன் அநுயாத்ரையாக எழுந்தருளியிருந்து சாற்றுமுறையும் நடத்திவைத்தது கண்கொள்ளாக் காக்ஷியாக இருந்தது. பின்பு ஸகலவிதமரியாதைகளுடனும் பெருமாளையும் தாயாரையும் மங்களாசாஸனம் பண்ணி சால்வையும் உபஹாரங்களும் ஸமர்ப்பித்தாயிற்று. மடத்திற்குத் திரும்பி எழுந்தருளும்போது அங்குள்ள 5 அழகியசிங்கர்களது ப்ருந்தாவனங்களுக்கும் எழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணி மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு மடத்திற்கெழுந்தருளினார். அன்று மாத்யாஹ்நிகஸ்நாநத்தை ப்ருந்தாவனத்தைச்சேர்ந்த ஸ்ரீநிவாஸபுஷ்கரிணியில் ஆச்ரமப் படித்துறையில் செய்தருளியாயிற்று. புள்ளபூதங்குடியில் அத்யயன உத்ஸவம் நடக்கிறது.

(தொடரும்)

குறிப்பு;- இந்த ஸஞ்சிகையிலிருந்து புது ஸம்புடம் ஆரம்பமாகிறபடியால் சந்தாதாரர்கள் முன்வருஷத்திய (1954) சந்தாபாக்கியையும், புது வருஷத்திய சந்தாக்களையும் அனுப்பிக்கொடுத்து உபகரிக்கப் பிரார்த்திக்கிறோம். விஷயதானம் செய்யும் ஸ்வாமிகளும் ஸரளமாயும், (ஸர்வஜனங்களுக்கும் புரியும்படியான எளிய நடையில்) அதிகவிஸ்தாரமில்லாமலும் உள்ள வ்யாஸங்களை அனுக்ரஹித்து நமது பத்ரிகையை வ்ருத்தி செய்யப் பிரார்த்திக்கிறோம். நம் ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்காக ஸ்ரீ அழகியசிங்கரது நியமனப்படி நடத்தப்படுகின்ற இப் பத்திரிகையில் 13 ஸம்புடங்கள் வெளிவந்துள்ளன. இம் மாதத்திலிருந்து 14 வது ஸம்புடம் ஆரம்பமாகிறது. இதற்கு சந்தாதாரர்களாகத் தங்களது பந்துக்களையும் ஸ்நேகிதர்களையும் சேரும்படி செய்தால் அது நம் ஸம்ப்ரதாயாபிவ்ருத்திக்காகச் செய்த ஓர் சிறந்த கைங்கர்யமாகும்.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ர ஹ

ஜய ஹு தை – மாசி மீ 1955 ஹு ஜனவரி –

[உத்தராயணம், ஹேமந்த ருது; மகர மீ]

14–1–55	1௳	வெள்ளிக்கிழமை	மகர ரவி 8-27; ஸங்க்ரம உத்தராயண புண்யகாலம்; ...ராந்தி பண்டிகை; தநுர்பூஜா பூர்த்தி; சூன்ய திதி; 14-வது வார்ஷிக ஸ்ரீமாலோல வித்வத்ஸபை ஆரம்பம்.
19–1–55	6௳	புதன்கிழமை	ஏகாதசி திருவுள்ளூர் ஸ்ரீவீரராகவஸ்வாமிக்கு தை ப்ரஹ்மோத்ஸவாரம்பம்.
20–1–55	7௳	வியாழக்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 4-23.
21–1–55	8௳	வெள்ளிக்கிழமை	ஸ்ரீவீரராகவன் கருடோத்ஸவம்.
23–1–55	10௳	ஞாயிற்றுக்கிழமை	● அமாவாஸ்யை; உத்திராடம்; 42-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25–1–55	12௳	செவ்வாய்க்கிழமை	ஸ்ரீவீரராகவன் திருத்தேர்.
30–1–55	17௳	ஞாயிற்றுக்கிழமை	ரதஸப்தமி.
3–2–55	21௳	வியாழக்கிழமை	ஏகாதசி வ்ரதம்; ஏகாதசி - த்வாதசி திதி த்வயம்.
4–2–55	22௳	வெள்ளிக்கிழமை	திருவாதிரை; 38-வது பட்டம் ஸ்ரீஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
5–2–55	23௳	சனிக்கிழமை	புநர்வஸு; எம்பார் திருநக்ஷத்ரம்.
6–2–55	24௳	ஞாயிற்றுக்கிழமை	○ பூர்ணிமை.
8–2–55	26௳	செவ்வாய்க்கிழமை	மகம்; திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்.
11–2–55	29௳	வெள்ளிக்கிழமை	ஹஸ்தம்; கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
12–2–55	30௳	சனிக்கிழமை	கும்பரவி 35 - 43; விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; மகர க்ருஷ்ண ஷஷ்டி திதி.

[உத்தராயணம் சிசிர ருது; கும்ப மீ]

13–2–55	மாசி 1௳	ஞாயிற்றுக்கிழமை	கும்பக்ருஷ்ணஸப்தமி திதி.
14–2–55	2௳	திங்கட்கிழமை	அஷ்டமிதிதி; அஷ்டகா.
15–2–55	3௳	செவ்வாய்க்கிழமை	அதிதி; அந்வஷ்டகா.
16–2–55	4௳	புதன்கிழமை	நவமிதிதி.
18–2–55	6௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி.
22–2–55	10௳	செவ்வாய்க்கிழமை	● அமாவாஸ்யை.
27–2–55	15௳	ஞாயிற்றுக்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம்.